பக்கங்கள்-16 | 26.புரட்டாசி.2021 | விலை-30.00




# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –357



## ‘அல்ஹா’ ஒரு கொலைகாரன் என கூறினாலும் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொள்ளும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சாணக்கியன் சாட்டை அடி

## தியாகி திலீபனும் – செல்வராசா கஜேந்திரனும்

## ஜனாதிபதியின் உள்ளக பொறிமுறையும், ஏமாற்று அரசியலும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

## 'அல்ஹா' ஒரு கொலைகாரன் என கூறினாலும் அரசாங்கத்துடன் ஒட்டிககொண்டிருப்பவர்களே

# இந்த முஸ்லீம் அரசியல் வாதிகள் சாணக்கியன் சாட்டை அடி

முஸ்லீம்களினுடைய இறைவன் அல்ஹாவை அவதூராக பேசிய கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு அவரை இழிவு படுத்தியது மட்டுமல்லாது மதரீதியாக அவர்களை இழிவு படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கின்றார். அதனை தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் முஸ்லிம் தலைவர்கள் குரல் கொடுக்கவில்லை மௌனம் காக்கின்றார்கள் என்ற அடுத்த கோசத்திலே அவர் பாராளுமன்றத்திலே முளக்கித்தள்ளினார்.

சாணக்கியன் அவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாக தெரியவேண்டும் ஒரு வகையில் உங்களது பேச்சாற்றலை வரவேற்கின்றோம் அதேநேரத்தில் தமிழ் மக்களின் இனப்படுகொலை சம்பந்தமாக தற்பொழுது சென்றுகொண்டிருக்கின்றது. அந்த இனப்படுகொலை ரீதியான விடயங்களும் தாங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதே இந்த நிலைப்பாடு. முஸ்லிம் அரசியல் தலைமைகளும் தமிழினப்படுகொலையின் பங்குதாரிகள். முஸ்லிம் அரசியல் தலைமைகளும் தமிழினத்துக்காக ஆயுதம் ஏந்தினார்கள். முஸ்லிம் புலனாய்வாளர்களும் முஸ்லிம் ஆயுததாரிகளும் தமிழ் இனத்தை காட்டிக்கொடுத்தார்கள் என்பதையும் நீங்கள் அங்கு சுட்டிக்காட்டியிருந்தால் அதனுடைய சில விளைவுகளைத்தான் தற்பொழுது அனுபவிப்பீர்கள் என்று கூறினால் அது சாலச்சிறந்ததாக இருக்கும். சிங்கள பேரினவாதிகள் கடந்த 35 ஆண்டு காலங்களாக தமிழினத்தை அடக்கியாளுகின்ற நிலைப்பாட்டை கொண்டிருந்த பொழுது இவர்கள் அவர்களுடன் சேர்ந்து பாற்சோறு பொங்கி கொண்டாடினார்கள் புத்தளத்திலே அக்கறைப்பற்றிலே காத்தான்குடியிலே பொத்துவிலில் எங்கும் கொண்டாட்டத்தை நடத்தினார்கள். ஒரு விடயத்தை த.தே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நீங்கள் முஸ்லீம் களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பது தவறு என்று கூற வில்லை. ஆனால் நீங்கள் எவ்வாறு நடந்துகொண்டாலும் அவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கே வாக்களிப்பார்கள். அவர்களினுடைய வாக்கில் ஒரு வாக்கேனும் உங்களுக்கு கிடைக்காது அதில் மாற்றுக்கருத்து இல்லை. இன்னுமொரு விடயம் என்னவென்றால் அவர்களை பொறுத்தவரையில் தமக்கு சாதகமான சில விடயங்கள் வருகின்றபொழுது தமிழ் மக்களை ஆதரிக்கின்றவாறு ஒரு தொணியை ஏற்படுத்துவார்கள். அவ்வாறு தான் கடந்த காலங்களிலும் நடந்து கொண்டார்கள்.

எனவே இதில் ஒரு விடயத்தை தெளிவாக சொல்லுகின்றேன். அல்ஹா என்ற இறைவன் அனைவருக்கும் பொதுவானவர். அல்ஹா என்ற இறைவனை அவர்கள் அவமதித்து பேசியது உண்மையில் பிழையான விடயம். எந்த மதத்தை எவர் இழிவுபடுத்தி பேசினாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதை ஒருவிதத்திலே மோட்டு சிங்களவர் என்ற பாணியிலே அவர் பேசியிருந்தார். மோட்டு சிங்களவர் இப்படித்தான் பேசுவார்கள் வெற்றிலைக்கு பெயர் போனவர்கள் போன்றெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறு பேசியிருந்தாலும் பிரச்சனை இல்லை. இதில் இன்னுமொரு கவலைக்குரிய விடயம் நீதி அமைச்சராக இருக்கின்ற அலிசப்ரி அவர்கள் மௌனவிரதம் காத்தால் அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவர் ஒரு அரசாங்கத்தின் கைக்கூலி பல்லு பிடுங்கிய பாம்பு. எனவே அவர் தனது இனத்துக்காக கூட பேசவில்லை. அவர்களின் இறுதிப்போர் "விகாத்" அதாவது இறைவனை அல்ஹாவை அவமதித்தால் அந்த இறுதிப்போரை முன்னெடுக்க வேண்டும் என்பது அவர்களுடைய வேதவாக்கு. ஆகவே இப்படிப்பட்டவர்கள் அரபு தேசங்களுக்கு செல்வார்களாக இருந்தால் எந்தவித கேள்விகளுமின்றி நேரடியாக கழுத்தை வெட்டிவிடுவார்கள். இன்று ஒரு மதத்தினுடைய கடவுளை இழிவுபடுத்துவது என்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாது.

ஆனால் ஒரு விடயம் இவர்கள் கொலை செய்கின்ற பொழுது அதாவது முஸ்லிம் தரப்புக்கள் எந்த நாட்டில் கொலை செய்யப்படுகின்ற பொழுதும் அல்ஹாகோ அக்பர் என்பார்கள். ஆடறுப்பதற்கும் மாடறுப்பதற்கும் மனிதனைக்கொள்வதற்குமென அனைத்திற்குமே அல்ஹாகோ அக்பர் என்றே கூறுவார்கள். ஆகவே அவர்களிடமும் சிறந்த பண்புகள் உருவாக்கப்பட கூறவேண்டும். எடுத்ததுக்கு எல்லாம் அல்ஹாகோ அக்பர். நீங்கள் இறைவழி போதத்தை கடைப்பிடிக்க வேண்டுமாக இருந்தால் நீங்கள் மௌனவிகளாக இருந்து போதனையை செய்யுங்கள் ஏன் பாராளுமன்றத்திற்கு வருகின்றீர்கள். பாராளுமன்றத்திற்குள் வந்து உயிருக்கும் மேலான கடவுளை இழிவுபடுத்தும் பொழுது



அலிசப்ரி அவர்கள் உண்மையிலே பதவியை திறந்திருக்க வேண்டும். அலிசப்ரி அவர்கள் அதிலே நாக்கறுத்து செத்திருக்க வேண்டும். இந்த நாட்டில் எவ்வாறிருக்கின்றதோ சவுதி அரேபியா துபாய் கட்டார் நாடுகளில் எல்லாம் அல்ஹாவை அவமதித்தால் அதனுடைய தண்டனை எது வென்று கூட தெரியும். ஆகவே கலகொட அத்தே ஞான சாரதேரர் அன்றிலிருந்து இன்றுவரை அதனை சொல்லி வருகின்றார் அவரை இன்னுமொரு விதத்திலே அந்த இனம் பார்த்துக் கொள்ள வேண்டிய சூழல் தற்பொழுது உருவாகிவருகின்றது. இனி அவரை மன்னிப்பார்களா என்றுகூட தெரியவில்லை. அரசாங்கம் தான் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய சூழலும் ஏற்படப் போகின்றது. இதிலே இன்னுமொரு விடயம் என்னவென்றால் அது போன்று இன்று காத்தான்குடியை எடுத்துக்கொண்டால் ஓட்டமாவடியிலிருந்து அக்கறைப்பற்றி பொத்துவில் வரை அம்பாறையில் இருக்கின்ற முஸ்லீம்கள் கூட கடந்த காலத்திலே இலங்கை அரசுடன் சேர்ந்து ஊர்காவற்படை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழர்களை சுட்டுக் கொண்டார்கள். ஆயிரக்கணக்கான வீடுகளை எறித்தார்கள் கல்முனையிலே 40 கிராமங்கள் அழிக்கப்பட்டன. பல கோவில்கள் அழிக்கப்பட்டன. இதுவொருமுறை சாணக்கியனிடம் கேள்வியாக தொடுத்த பொழுது அந்த வரலாறுகூட அவருக்கு தெரியாது.

எனவே உன்னுடைய சமுதாயத்தைப்பற்றி முதலாவது பேசி அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுத்துவிட்டு ஏனைய சமுதாயத்தைப்பற்றி பேசுவது சாலச்சிறந்தது. அவர்களில் 17க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் இவ் உறுப்பினர்கள் அனைவரும் ரவுப் ஹக்கீமாக இருக்கலாம் அல்லது அலிசப்ரியாக இருக்கலாம் யாராக இருந்தாலும் இவர்கள் அனைவரும் மடையர்களுமல்ல, இவர்கள் சாணக்கியமான அரசியலை செய்யக்கூடியவர்கள். இவ்வாறெல்லாம் செய்யக்கூடியவர்கள் இவர்கள் அல்ஹாவைப் பற்றி பேசிய பேச்சுக்கள் முஸ்லிம்களை இழிவுபடுத்தி பேசிய பேச்சுக்களுக்கு எல்லாம் குரல் கொடுக்காத பொழுது சாணக்கியன் மட்டும் குரல் கொடுத்திருக்கின்றார் என்றால் அது முஸ்லிம் அமைச்சர்களுடைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய மறுபுறத்தில் ஒரு வெற்றி தான்.

ரிஷாட் பதியூதின் அவர்களைப் போன்று துணிந்து பேசக்கூடிய ஆற்றல் கொண்டு பேசக்கூடியவர்களாக தற்பொழுது உள்ள தரப்பில்லை. அதுபோல் ஹிஸ்புல்லாவை போன்று துணிந்து பேசக்கூடியவர்களும் இல்லை. ஆனால் ஹிஸ்புல்லா அவர்களும் மாறி மாறி வருகின்ற அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு பயணித்திருந்தார். ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு 35 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும், கடத்தி காணாமலாக்கப்பட்டும், சரணடைந்தவர்கள் 450 பேர் கொலை செய்யப்பட்டு இவ்வாறெல்லாம் செய்த விடயங்களை சாணக்கியன் அவர்கள் பாராளுமன்றத்திலே சுட்டிக்காட்டியிருந்தால் அது சிறப்பாக இருந்திருக்கும். இதையெல்லாம் அவர் சுட்டிக்காட்ட மறுத்துவிட்டு முஸ்லீம்களால் தமிழினத்துக்குஇழைக்கப்பட்டகொடுரங்கள் பல இருக்கின்றது. காத்தான்குடி பள்ளிவாசலிலே விடுதலைப்புலிகள் தான் தாக்குதல் நடத்தினார்கள் என அவர் சொல்லுகின்றார்.

13ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிஹெறியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## அரசு கூறும் உள்ளகப் பொறிமுறை கானல் நீர் போன்றது

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகளால் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை பெற்றுத்தராது என்கிற நிலையே தொடர்கின்றது. மாறாக மேலும் மேலும் தமிழ் மக்களை அடக்குகின்ற செயற்பாடுகளையே எதிர்பார்த்ததைப்போல இவ்வரசும் தொடர்ந்து செய்து வருகின்றது. மனித உரிமை மீறல் சம்பவங்களும் நடைபெறாமலில்லை. 2019 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்கள் இன்று வரை தமிழர்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதை தவிர்த்தே வருகிறார். தமிழ்ப் பிரதிநிதிகளைச் சந்திப்பதையும் புறக்கணித்து வருகிறார். சர்வதேசத்தில் ஒன்றும் உள்ளூரில் ஒன்றுமாக அவரது அரசியல் பயணம் தமிழ் மக்கள் விடயத்தில் தொடர்கின்றது என்பதே உண்மை. இருந்தபோதிலும் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் 76வது கூட்டத்தொடரில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதான உரை அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. அந்த உரையானது பொருளாதாரத்திற்கு வலுசேர்ப்பதாக மட்டுமே அமைந்தே தவிர, தமிழ் மக்களது தீர்வுத்திட்டம் தொடர்பான எந்த கருத்துக்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கவில்லை. இலங்கையின் உள்ளக பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாக தீர்க்கப்பட வேண்டும் எனவும் அதற்காக புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தபோதிலும், ஜனாதிபதியின் ஐநா உரையில் இவ்விடயம் தொடர்பாக எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரிய கேள்வியை எழுப்பியுள்ளது. உள்ளக பொறிமுறை ஊடாகவே தீர்வுகள் எட்டப்படும் என்னும் கருத்தானது சாத்தியமற்ற ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. போர்க்குற்றத்தினை செய்தவர்கள் என சர்வதேச ரீதியாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களாலேயே எவ்வாறு விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அவ்வாறு முன்னெடுத்தாலும் அது நீதியான விசாரணையாக அமையுமா? ஐ.நா.கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, அரச இராஜாங்க அமைச்சர் ஒருவரால் அநுராதபுர சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்ட சம்பத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது உள்ள அரசாங்கம், தியாகி திலீபனது நினைவுநாளை ஜனநாயக முறையில் அஞ்சலி செலுத்த வந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களை அவரது சிறப்புரிமைகளை மீறி அடாவடித்தனமாக பொலிசார் இழுத்துச்சென்று அவரை வாகனத்தில் ஏற்றிய சம்பவமும் பதிவாகியிருக்கிறது. இவ்வாறான சம்பவங்களின் மூலமும் சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறை, இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் உயிர் அச்சுறுத்தலுடன் அடக்குமுறைகளுக்குள் சிக்குண்டுள்ளார்கள் என்பதை பறைசாற்றி நிற்கின்றது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை உள்ளக பொறிமுறையின் ஊடாக இவ்வரசாங்கம் கூறுவதைப்போல வழங்குவார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

வருடாந்தம் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடர் ஆரம்பமாகின்றபோது தமிழ் மக்களுக்களுக் கான தீர்வு விடயத்தில் ஏதோவொன்று நடை பெறும் என்கிற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும். அதனால் தான் இன்றும் அவர்கள் சர்வதேசமே நீதி வழங்கு என்று வீதிகளில் போராடி வருகின்றார்கள். ஆனால் ஐ.நா சபையானது வருடாவருடம் கனமான அறிக்கைகளை மாத்திரமே வெளியிட்டு வருகின்றது. பிரேரணைகள் நாடுகளால் நிறைவேற்றப்படுகின்றது. ஆனால் இலங்கை சர்வதேச சமூகத்தின் செல்லப்பிள்ளை யாகவே இன்றும் வலம் வருகின்றது. இந் நாட்டில் போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் நடந்து என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் ஏராளமாக ஐ.நாவிடம் இருக்கிறது. சனல் 4 என்கிற தொலை க்காட்சி ஆவணப்படமாகவே ஐ.நாவில் ஒளிபரப்பியது. இருந்தும் .துவரை தமிழ் மக்களுக்கு ஐ.நாவால் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கானத் தீர்வுகள் கிடைக்கவேண்டுமெனில் சர்வதேச விசாரணையும், சர்வதேச நீதிமன்றமும் தான் ஒரே வழி. அதை விடுத்து அரசு கூறும் உள்ளகப்பொறிமுறையும், ஐ.நா கூட்டத்தொடர்களும் கானல் நீரே.

# 161 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

மேலே குறிப்பிட்ட விடயங்கள் யாவும் ஒன்றுசேர்ந்ததன் விளைவாக வான்குடைத் தரையிறங்கல் வீரர்களைக் கொண்ட ரெஜிமெண்டுகள் (மிகச்சிறந்த சமர்த்திறன் கொண்ட சோவியத்படைவீரர்கள்) பதுங்கித் தாக்குதலுக்குள் அகப்பட்டு, முழுச் செக்சன்களாகவும் பிளாட்டூன்களாகவும் கொல்லப்பட்டார்கள்.

ஊபகரணங்களின் தரமும் கடின இராணுவத் தொழினுட்பங்களும் (இவ்வாறானவை யாதெனில், உலங்கு வானூர்திகள், விமானங்கள், கவசவாகனங்கள், அவதானிப்பு மற்றும் தொடர்புக் கருவிகள் போன்றன) கூடுதலாகச் சீர்திருத்தப்படுவதற்கான வாழ்த்துக்களைப் பெற்றன.

ஏன்னத்திற்காகவெனத்தெரியாமல், பிறரது நிலத்தில் சாவதற்கும் போரிடுவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்ட இராணுவப் படையாட்களின் மனநிலை ஒவ்வொரு ஆண்டும் தீவிரமாகக் கெடத்தொடங்கியது. ஆளணிகள் மத்தியில் பின்வரும் போக்குகள் பெரியளவில் பரவியது. மதுப்பழக்கம், போதைப்பழக்கம், களியாட்ட விளையாட்டு, "கறுப்புச் சந்தையில்" திருட்டு வியாபாரம், கள்ளக்கடத்தல் போன்றனவே அவையாகும். போரில் பங்குபற்றியிருந்ததன் விளைவாகக் கூடுதலான சிப்பாய்கள் மனக்கோளாறுக்கு (மனநோய்க்கு) ஆளாகியிருந்தனர்.

ஊத்தியோகபூர்வத் தரவுகளின்படி ஆப்கானிஸ்தானில் கிட்டத்தட்ட 14000 சோவியத் படைவீரர்களும் அதிகாரிகளும் கொல்லப்பட்டதுடன், அண்ணளவாக 50,000 பேர் காயத்திற்கும் உள்ளாகினர். உத்தியோகபூர்வமற்ற தகவல்களின் பிரகாரம், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 40,000 - 45,000 பேர் வரையாகும். அத்துடன், 130,000வரையானோர் காயமடைந்திருந்தனர்.

முடிவு

1989 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற ஒன்பதாண்டுப்போரின் பெறுபேறுகள் பின்வருமாறாக இருந்தன. அரச பாதுகாப்புச் சபையின் ("காட்டின்") முன்னாள் தலைவன் நஜிபுல்லா 1986 ஆம் ஆண்டு மே 4 ஆம் திகதியிலிருந்து காபூல் ஆட்சிக்குத் தலைமை தாங்கினான். ஆவன் நகரத்தையும் பயன்தரு கனியங்களைப் பெற்றுக் கொள்கின்ற கனியச் சுரங்கங்களையும் கிட்டத்தட்ட 8 வீதமான கிராமங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான்.



பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட நான்கிலிருந்து ஆறு மில்லியன் வரையான ஆப்கானியர்கள் அகதிமுகாம்களில் தங்கியிருந்தனர். இராணுவ நடவடிக்கையின் விளைவாக 900000 இற்கு மேற்பட்ட ஆப்கானியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். ஊனமுற்றவர்களும் நோய்வாய்ப்பட்டவர்களும் எந்தக் கணக்கெடுப்பிலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஒருவரையொருவர் எதிர்த்துக் கொண்டிருக்கின்ற தரப்பினர்களில் எவராலும் தமக்குச் சாதகமாகச் சூழ்நிலையைத் தீவிரமாக மாற்ற முடியாமல் போனது. சோவியத் ரசியாவைப் பொறுத்தவரையில் ஆப்கானிஸ்தான் "கரும்புள்ளியாக" மாறியிருந்தது. இதற்காகச் சோவியத் ரசியாவின் மிகப் பிரமாண்டமான சொத்துக்கள் இருந்த சுவடு தெரியாமல் கரைந்து போயின. மேற்கத்தேய நிபுணர்களின் புள்ளிவிபரப்படி, ஆப்கான் போர் சோவியத் ரசியாவிற்கு 80 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழிக்கச் செய்துள்ளது!

இவ்வாறான செலவால் பூரணமாகத் தனது சாத்தியங்களைத் தொலைத்த மையப்படுத்தப்பட்ட சோவியத் பொருளாதாரம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல முடியாமல் போனது. முடிவில் உள்நாட்டு அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தபடி பொருளாதார நெருக்கடி சோவியத் ரசியாவில் தோன்றியது. ஆர்த்தமற்றசமர்பற்றியமக்களின்அதிருப்தி நாட்டில் தோன்றியதுடன் ஒவ்வொரு நாளும் அது தீவிரமடையவும் தொடங்கியது.

"ஆப்கானிய சனநாயக மக்கள் கட்சியின் ஆரம்ப நோக்கங்கள் எட்டப்படவில்லை. இதனைச் செய்ய அக்கட்சியும் புரட்சி அரசாங்கமும் மறுத்துவிட்டன. அப்படியானால், நாட்டில் சோவியத் படைகள் இருப்பதன் அர்த்தம் இழக்கப்படுகின்றது" ("சோவியத் ரசியா" எனும் பத்திரிகையில்) என்பதனைப் பகிரங்கமாக வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டது. பெப்ரவரி 1989 ஆம் ஆண்டு சோவியத் படைகள் அவமானத்துடன் வெளியெறியதோடு யாவும் முடிவுக்கு வந்தன.

சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் (அமைப்புக்கள்)

மிகையில் கலேஸ்னிக்கவ் (ஒழுங்கமைப்பும் செயற்பாட்டுத் தந்திரோபாயமும்)

சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுவின் உள்ளடக்கம்

சுதந்திர நாடுகள் கூட்டமைப்பிலுள்ள (சி.ஐ.எஸ்) சில நாடுகளினது ஆயுதப் பிணக்குகளின் ஆய்வுகள் கூறுவதன் பிரகாரம், தீவிரவாதப் போக்கைக்கொண்ட எதிர்ப்பியக்கத்தின் தரப்பில் சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் பங்கெடுக்கின்றன. வழக்கமாக, அவர்கள் ஒரேயொரு திட்ட அடிப்படையில் உருவாக்கப்படுகின்றார்கள்.

ஆளணிகளுக்குள் உள்ளடக்கப்படுகின்ற ஆட்களைப் பூர்த்தி செய்வது பிரதேசக் கொள்கையினடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றது. கிராமத்திலிருந்து - குழு அல்லது சிறிய படைப்பிரிவு. சமூகத்திலிருந்து - நடுத்தர அல்லது பெரிய படைப்பிரிவு. போராளிகளின் வயதெல்லை வரையறையற்றது. ஆனால், அவர்கள் 40 வயதிற்குக் குறைந்தவர்களாக இருப்பார்கள். அமைப்பின் கட்டளையாளனுக்கான தெரிவு (களமுனைக் கட்டளையாளன்) எதிர்ப்பியக்கப் பிரதேச மக்களால் நிர்ணயிக்கப்படுகின்றது. அவர்கள் சமூகத்திலுள்ள பிரபல்யமிக்க ஆட்களிலிருந்து கட்டளையாளனைத் தெரிவு செய்கின்றார்கள்.

தொடர்வான்...

நெற்றிபொறியன்

# தியாகி திலீபனும் செல்வராசா கஜேந்திரனும்



தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். உண்மையில் இதுவொரு ஜனநாயகத்தை மீறுகின்ற ஒரு செயலாகவே இது அமையப்பெறுகின்றது. 34 ஆண்டுகள் கடந்துவருகையில் தியாகி திலீபன் நல்லதொரு வகையிலே நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்து அவர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார். இந்த நாட்டில் ஐந்தம்ச கோரிக்கையின் ஊடாக அதிலும் மிக முக்கியமாக இந்திய இராணுவம் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆகவே தியாகங்கள் மதிக்கப்பட வேண்டியதொன்று. இன்று மகாத்மா காந்தியினுடைய தியாகத்தை இந்திய அரசு மதிக்கின்றது. அதாவது இந்திய இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றுவதற்கு ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் 5000 க்கும் மேற்பட்ட ஆயுதங்களை A-K 47 அதற்கான மருந்து பொருட்கள், வாகனங்கள், அதைவிட வெடிகுண்டுகள் போன்றவற்றை எல்லாம் இலங்கை அரசு அந்த காலகட்டத்தில் வழங்கியிருந்தது.

அவ்வாறிருக்கும் பொழுது இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றுவ தற்கான தேவை இலங்கை அரசிற்கு இருந்தது. அந்த ஒரு காரணத்தினால் இவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பெருமளவு ஆயுதங்களை கொடுத்திருந்தார்கள். அதை பாராளுமன்றத்தில் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய இராணுவ கட்டளைத்தளபதியாக இருந்த கருணாம் மான் அவர்கள் தெரிவித்திருந்தார். எனவே தங்களுடைய செயற்பாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கிவிட்டு தற்பொழுது தியாகி திலீபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருந்த இடத்திற்கு அஞ்சலி செலுத்த தடை செய்வது என்பது அதாவது செல்வராஜா கஜேந்திரன் அவர்கள் அக் காலகட்டத்தில் இருந்து பல்கலைக் கழக மாணவர்களுடன் இணைந்து இப்போ ராட்டத்திற்கு பல பங்களிப்புக்களையும் செய்திருந்தார். அதே நேரத்தில் அன்றும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக தமிழ் தேசி ய மக்கள் முன்னணியினால் தெரிவு செய்யப்பட்டுவிட்டார். இந்த நாட்டில் ஜனநாயகம் தொடர்ந்தும் மீறப்பட்டு வருகின்றது. இந்த ஜனநாயகத்திற்கு எதிரான போராட்டம் ஆங்காங்கே வெடிக்கக்கூடிய சூழல் உருவாகும். அதே நேரத்தில் ஆப்கானிஸ்தானின் நிலைமை போன்று இங்கும் நிலைமை வரலாம் அந்தளவுக்கு நிலைமை மோசமடைந்து சென்றுகொண்டிருக்கின்றது. எனவே தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், இறந்த மாவீரர்களுக்கான நினைவேந்தல் என்பவற்றையெல்லாம் மேற்கொள்வதற்கு இந்த அரசு விடவேண்டும். காரணம் என்னவென்றால் அரசாங்கம் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளை தமது தற்பாதுகாப்பிற்காக வைத்திருக்கின்றார்கள். கே.பி, கருணா, பிள்ளையான் போன்றவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் தான். ஆகவே உண்ணாவிரதம் இருந்த தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தக்கூடாது என்பதும் முள்ளிவாய்க்காலிலே 1 இலட்சத்து 40 ஆயிரம்பேர் வரை கொலை செய்யப்பட்டதை நினைவு கூர்ந்து ஒரே இடத்தில் தூபியை கட்டி அஞ்சலி செலுத்தக்கூடாது என்பதும் தடை விதிக்கின்ற இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து வாழ்வது எப்படி என்ற சிந்தனை தமிழ் மக்கள் மத்தியில் இன்றைய நிலையில் எழுந்துள்ளது.

தியாகி திலீபன் நீராகாரம் இன்றி அகிம்சை ரீதியிலே மரணித்தான் என்பது உலக நாடுகள் அனைத்திற்கும் தெரியும். அகிம்சை ரீதியிலே ஒருவர் போராட்டம் மேற்கொண்டால் அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அதை நிச்சயமாக இந்த அரசு செய்ய வேண்டும். ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றவர்கள் எல்லாம் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்குகின்ற பௌத்த தேரர்கள். கலகொட அத்தே ஞானசார தேரர் போன்றவர்களும் பின்புலத்தில் இருந்து செயற்படுபடலாம். அல்லது அதைப்போன்று பௌத்த பிக்குகளும் செயற்படலாம். முஸ்லிம் அமைப்புக்களும் முஸ்லிம் ஒட்டுக்குழுக்களும் தமிழ் ஒட்டுக்குழுக்களும் செயற்பட்டாலும் மக்கள் மனதிலே இந்த அரசாங்கம் வென்றுவிட முடியாது. காரணம் என்ன வென்றால் இன்று ஆணையிறவிலே தமிழின படுகொலையை மேற்கொண்ட இராணுவத்தினுடைய தூபி கட்டப்பட்டுள்ளது. மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ளது.



முள்ளிவாய்க்காலில் கட்டப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது தமிழ் மக்களிடையே ஒரு வெறுப்பு காணப்படுகின்றது. முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இராணுவத்தினுடைய சண்டையின் போது இறந்த மக்களை ஆங்காங்கே புதைத்து விட்டுவந்தார்கள். முள்ளிவாய்க்காலிலே அஞ்சலி செலுத்த அனுமதி வழங்காத அரசு, தூபியை கட்ட அனுமதி வழங்காத அரசு எப்படி தமிழ் மக்களினுடைய பிரச்சனையை தீர்க்கப்போகின்றார்கள் என்ற சந்தேகம் தற்பொழுது எழுந்துள்ளது.

ஆகவே நாங்கள் இந்த நாட்டை விட்டு ஓடிவிட்டு பேசவில்லை இலங்கையில் இருந்து கொண்டே நேரடியாக பேசுகின்றோம். காரணம் என்னவென்றால் ஆயுதப்போராட்டங்கள் நடைபெற்ற காலங்களில்கூட பேச்சு சுதந்திரம் அல்லது மனவழிபாட்டு சுதந்திரம் அல்லது அஞ்சலி செலுத்துவதற்கான சுதந்திரம் கூட அக்காலத்தில் இருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தில்கூட இருந்தது.

சிங்களவர்கள் அல்லது சிங்கள இராணுவம் தமிழ் பிரதேசங்களிலே கிளிநொச்சி ஆணையிறவு போன்ற இடங்களில் முள்ளிவாய்க்காலில் இருக்கும் நினைவு தூபிகள் அனைத்தும் தமிழ் மக்களால் அஞ்சலி செலுத்தக்கூடாது என்று கூறினால் முள்ளிவாயிக்காலிலே இருக்கின்ற இராணுவத்தூபிகள், மின்னல் நடவடிக்கையாக கட்டப்பட்ட இராணுவத்தூபி, ஆணையிறவில் கட்டப்பட்ட தூபிகள் போன்ற அனைத்தும் வெகுவிரைவில் தமிழ் மக்களால் அடித்து நொருக்கப்படும் நிலைமை நிச்சயமாக ஏற்படும். ஏனென்றால் மக்கள் அந்தளவு விரக்தியடைந்திருக்கின்றார்கள். 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலே யுத்தம் முடிவடைந்துள்ளது. தற்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த போராட்ட அரங்கிலே இல்லை ஆனாலும் யுத்தம் முடிவடைந்தும் மக்களை ஒரு சுயாதீனமாக அஞ்சலி செலுத்தவிடக்கூடாது என்று நினைப்பதால் அரசாங்கம் இதில் என்ன தவறுகளை கண்டுவிட்டது என்று நோக்கத்தோன்றுகின்றது.

ஆகவே மக்கள் தெரிவித்த சில ஆழமான கருத்துக்கள் அவர்களினுடைய வெளிப்பாடுகள் இலங்கை அரசாங்கம் தான் மீண்டுமொரு தீவிரவாத போக்கையும் மீண்டுமொரு ஆயுத போராட்டத் தை எமது நாட்டில் உருவாக்குவதற்கான வழிவகைகளை வகுக்கின்றது. 1983ஆம் ஆண்டு யூலைக் கலவரம் எவ்வாறு உருவானது என்பதைப்பார் த்தால் அடுத்தகட்ட நகர்வுகளை இந்த நாட்டில் ஜனாதிபதி கோட்டபாய ராஜ பக்ச அவர்கள் நிறுத்தமாட்டார் என்பது தெரியும். இன்றைய பூகோள அரசியலுக்குள்ளேயே கடன் சுமையில் திண்டாடிக்கொண்டிருக்கின்ற இந்த இலங்கை அரசு மீளமுடியாத நிலையிலே இருக்கின்றது அடுத்த அரசாங்கம் வந்தாலும் மீளமுடியாத சூழல் ஏற்படும்.

ஆனால் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தரும் வகையில் இந்த அரசாங்கம் நிச்சயமாக செயற்பட வேண்டும். அவற்றை நாங்கள் அராஜகமான ஒரு நடவடிக்கையை அந்த காணொளியில் பார்த்துக்கொண்டிருந்தோம். புலம்பெயர்ந்த தளத்திலிருக்கும் மக்களும் மிகவும் மனவேதனையுடன் இருந்திருக்கின்றார்கள். அப்படியாக இருந்தால் முள்ளிவாய்க்காலிலே நிறுவப்பட்டிருக்கின்ற இராணுவத்தூபிகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும். மின்னல் நடவடிக்கையாக கட்டப்பட்ட இராணுவத்தூபி அகற்றப்பட வேண்டும். ஆணையிறவிலே கட்டப்பட்ட இராணுவத்தூபி அகற்றப்பட வேண்டும். இவை மூன்றுமே முக்கியமான தூபிகளாக இருக்கின்றன.

அப்படியில்லை என்றால் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிதர வேண்டும். அதுபோன்று முள்ளிவாய்க்காலிலே ஒரு நினைவுத்தூபியை கட்டுவதற்கும் இந்த அரசு அனுமதி தரவேண்டும். இது உண்மையில் அராஜகமான அடக்குமுறையாகத்தான் இருக்கின்றது.

தமிழ் பரப்பில் இருக்கும் ஊடகங்கள் முகநூல்களில் அரட்டையடிப்பவர்கள் அனைவரும் அரச கைக்கூலிகளாக செயற்படுபவர்களாக காணப்படுகின்றார்கள். துணிந்து சில விடயங்களை கூற வேண்டும். இன்று அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்கும் ஊடகங்கள் பலரும் பணிபுரிந்துகொண்டிருக்கின்றது அதுகவலைக்குரிய விடயம். அவர்கள் ஒரு விடயத்தை இவ்வாறு செய்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு எதிராகத்தான் செய்திகள் பிரசுரிக்கப்படவேண்டும்.

தொடரும்...

சுழியோடி

# ஜனாதிபதியின் உள்ளக பொறிமுறையும் ஏமாற்று அரசியலும்



ஐக்கிய நாடுகள் சபையின் 76வது கூட்டத்தொடர் வெகு சிறப்பாக இடம்பெற்றுவரும் நிலையில் இம்முறையாவது பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு ஓர் தீர்வு கிடைக்காதா என்ற ஏக்க நிலையில் தாயக தமிழினமும், புலம்பெயர் தமிழினமும் எதிர் பார்த்து நிற்கின்றது. கடந்த 75வது கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறை வேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தின் படி பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்தது. இதை ஐரோப்பிய பாராளுமன்றம் கவனத்தில் எடுத்து இலங்கை அரசானது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் வரை ஜி.எஸ்பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை அரசுக்கு வழங்குவதை தடை செய்வதை பரிசீலனை செய்ய தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறு ஜி.எஸ்பி. பிளஸ் வரிச்சலுகை தடை செய்யப்படுமாயின் அது இலங்கை பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடி நிலையை கண்டிப்பாக தோற்றுவிக்கும் ஏற்கனவே இலங்கை பொருளாதாரம் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மிகுந்த நெருக்கடியில் உள்ள நிலையில் இவ்வாறு வரிச்சலுகைகளும் நிறுத்தப்படுமாயின் மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இது இவ்வாறு இருக்க இம்முறை இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையினுடைய கூட்டத்தொடரில் இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். அதில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தையோ அல்லது அவர்களுக்கான நீதியை வழங்குவதைப்பற்றியோ எவ்வித விடயங்களும் தெரிவிக்கப்படவில்லை.

ஐ.நா.சபை செயளாலர் அன்டோனியோ குட்ரெஸை தெரிவித்த கருத்தானது காணாமல் போனோருக்கு மரணச்சான்றுதல், நெடுகாலமாக உள்ளோருக்கு பொது மன்னிப்பு , உள்ளக பொறிமுறையின் ஊடாக பிரச்சனைகளுக்கு தீர்வு, இனங்களுக்கிடையான ஒற்றுமை. போன்ற கருத்துக்களை கூறியிருக்கின்றார். இது "பழைய குருடி கதவை திறவடி" என்ற நிலைப்பாட்டில் உள்ளக பொறிமுறையூடாக பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்றும் அத்துடன் புலம் பெயர் அமைப்புக்களையும் புலம்பெயர் மக்களையும் பேச்சுக்கு அழைத்துள்ளமையானது சர்வதேசத்தை முற்றாக ஏமாற்றுவதாக அமைகின்றது. சரிபிழைக்கு அப்பால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இங்குள்ள நிலையில் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவது என்பது நகைப்புக்குரிய விடயமாகும். இதில் புலம்பெயர் அமைப்புக்களையோ அல்லது புலம்பெயர் எமது உறவுகளையோ இதில் குற்றம் சொல்லவோ அல்லது இழிவுபடுத்தவோ வரவில்லை. உண்மையில் தாயகத்தில் உள்ளவர்களுடன் பேச வேண்டும் பொறுப்புக்கூறல் யுத்தக் குற்றங்கள் நல்லிணக்க பொறிமுறை என்பனவற்றை ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் தீர்வை காண வேண்டுமே வழிய தனியே உள்ளக பொறிமுறையூடாக விசாரணையை மேற்கொள்ளுவதென்பது கொலைகாரன் கையில் நீதியை எதிர்பார்ப்பதற்கு சமன் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்து இன்றுடன் 12 வருடங்கள் ஆகின்ற நிலையில் இன்றுவரை தமிழர்களுக்கான எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை. காணாமல் போனோர் போராட்டங்கள் காலவரையில் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. காணாமல் போனோரை தேடும் பணியில் ஈடுபடும் உறவுகள் காணாமல் போனோரை கண்டடைவதற்குள் மரணித்து போய்விடுவார்கள். திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழர் தேசத்தில் பௌத்த விகாரைகள் தொடர் இராணுவ அடக்குமுறைகள் தமது உறவுகளைக்கூட நினைவுகூற முடியாத ஓர் இழிநிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தமிழ் மக்கள் ஒன்றை இவ்விடத்தில் புரிந்துகொள்ள வேண்டும். எமது தமிழ் தலைமைகள் கூறுவதை போல் வெளிநாட்டு மத்தியஸ்துடன் நல்லிணக்க பொறிமுறை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றினை நிலைநிறுத்துமாறு கோருவதானது முட்டாள்தனமானது. ஏனெனில் ஆயுதப்போராட்டம் இடம்பெற்ற காலம் தொட்டு பல மத்தியஸ்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் டோக்கியோவின் மத்தியஸ்துடனான பேச்சுவார்த்தை வரை சர்வதேச பேச்சுவார்த்தைகளாக ஏழும்.உள்ளூர் பேச்சுவார்த்தையாக பதினான்கும் இடம்பெற்று அவ் மத்தியஸ்தின் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் இலங்கை அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி வெற்றி கண்டதே கண்கூடு உண்மையில் இறுதி யுத்தத்தில் எமது மக்களின் அழிவுக்கு தனியே சிங்கள அரசோ அல்லது அந்நேரம் ஆட்சியில் இருந்தவர்கள் மட்டும் காரணமல்ல உலக வல்லரசுகளாக உலாவரும் நாடுகள் அனைத்தும் கூட்டுசேர்ந்து கொட்டமடித்ததே அந்த இறுதி யுத்த அழிவு இவ்வாறு இறுதி யுத்த அழிவுக்கு துணை நின்றவர்களிடம் நாம் நீதி கோரிநிற்பதில் பயனில்லை.


அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக பொலிஸ்காரன் என தன்னை வரித்து நிற்கும் அமெரிக்காவின் ஆலோசனை கூடமோ அமெரிக்காவின் தாளத்திற்கு ஏற்ப நடனமாடும் சபையே ஐ.நா சபை இலங்கைக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் இவ் ஐ.நா மன்றில் இடம்பெறாது என்பதே உண்மை அத்துடன் சீனா என்னும் பலம்பொருந்திய வல்லரசின் பிடிக்குள் இலங்கை உள்ளது. சீனாவை மீறி எந்தவொரு வல்லரசும் இலங்கையை தொடமுடியாது என்பது வெளிச்சமான உண்மை. ஆகவே உலக வல்லரசான அமெரிக்கா உதவும், பிரித்தானியா உதவும், ரஷ்யா உதவும் என கற்பனை செய்திருக்க முடியாது. இவ்விடயத்தில் ஓர் தீர்க்க தரிசன உண்மையை கூற வேண்டும். 1987ஆம் ஆண்டு தியாகி திலீபன் அவர்கள் அன்றுள்ள நிலையை பார்த்து இந்திய இராணுவம் எம்மை இரட்சிக்க வந்துள்ளது என தமிழ் மக்கள் மனம் குளிர்ந்த நிலையில் உண்ணாவிரதம் ஆரம்பிக்க முன்னர் அவர் பேசிய பேச்சில் ஓர் வரி இன்னும் பொருந்தும். அன்று அவர் பேசியது யாதெனில் இன்று தமிழர்கள் தம்முடைய இழிநிலையை புரிந்துகொள்ள முடியாமல் உள்ளார்கள். அவர்கள் ஓர் தெளிவற்ற நிலையில் உள்ளார்கள் இன்று உள்ள நிலையை தமிழர்கள் புரிந்து கொள்ள முடியாமல் போனால் நாளை எமது வரலாறு பரிதாபத்துக்குரியதாக மாறும் எனக் கூறினார்.

ஆம் நாம் இன்று பரிதாபத்துக்குரியவர்களாக உள்ளோம். எமக்கான தீர்வை பெற்றுத்தருவார்கள் என தமிழர்கள் தற்பொழுது வரை நம்பியுள்ள தமிழ் கட்சி தலைமைகள் தமக்குள் அதிகாரப்போட்டியும் சில்லறைத்தனமாக அரசியலும் போரில் இறந்த மக்கள் போராளிகளின் கல்லறைகள் மீதேறி தமது சுயநல அரசியலை மேற்கொண்டு வருகின்றார்களே ஒழிய ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐ.நா கூட்டத்தொடர் தொடங்கும் முன்னர் நித்திரையில் உள்ளவர்கள் போல் எழுந்து ஓர் அறிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பிவிட்டு யார் அனுப்பியது என்றுகூட தெரியாமல் அடிபடும் தமிழ் தலைமைகள் இவர்களா எமக்கான தீர்வை பெற்றுத்தருவார்கள். சிங்கள பெரும்பான்மை அரசியல் தலைமைகள், சிங்கள மக்கள், சிங்கள பௌத்த தலைமைகள் மனமுகர்ந்து தமிழர்களுக்கு தீர்வை கொடுக்க வேண்டுமென முடிவெடுத்தால் ஒழிய எமக்கான தீர்வு ஐ.நாவில் கிடைக்கப் போவதில்லை. அல்லது தமிழ் தலைமைகள் அனைத்தும் ஓர் அணியில் நின்று தமது அரசியல் பலத்தை காட்டி புலம்பெயர் தமிழர்கள், புலம் பெயர் அமைப்புக்கள், தாயக உறவுகள் எல்லாம் ஓரணியில் நின்று ஐ.நா சபையில் குரல் கொடுத்தால் தீர்ப்பு கிடைக்க சாத்தியமுள்ளது. இதற்கான வழிமுறையை ஏற்படுத்துவதே சிறந்ததாகும். வெறுமனே ஐ.நாவையும் இந்தியாவையும் அமெரிக்காவையும் நம்பாமல் எமது பிரச்சனையை ஓரணியில் இணைந்து பலமான அரசியல் கொண்டு முன்னெடுப்பதே ஒரே வழியாகும்.

**தாயகத்தான்**

# நாட்டில் ஜனநாயகம் அடக்கி ஒடுக்கப்படுகின்றது தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

**தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான – மாவை சோனாதிராஜா**



கேள்வி : கொரோனா வைரசின் தாக்கம் இருக்க மறுபுறம் ஐக்கிய நாடுகள் சபையினுடைய கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிலே சில விடயங்கள் தமிழ் மக்களுக்கு சார்பாக அமையவில்லை என்ற ஒரு சிலரதும் மற்றும் கட்சிகளின் கருத்துக்களும் இருக்கின்றன. அதேநேரத்தில் தமிழ் கட்சிகளுக்கிடையில் இருக்கின்ற முரண்பாடுகள் காரணமாக சரியான உரிய நேரத்திலே சில ஆவணங்களை சமர்ப்பிக்க முடியவில்லை. இதனால் மக்கள் மத்தியில் பல கேள்விகள் எழுந்திருக்கின்றது இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?

பதில் : உண்மையிலே தற்பொழுது கொரோனா வைரஸினால் நாட்டிலே பாதிக்கப்பட்ட மக்கள் 5 இலட்சத்தை தாண்டிவிட்டார்கள். 11 ஆயிரத்திற்கும் மேல் உயிர்பலி ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கம் இந்த ஆண்டின் ஆரம்பத்திலே இதற்கான மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். வக்சீன்ஸ் கூட ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அனைத்து கட்சிகளும் இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தால் அரசாங்கமே அதை செய்திருக்கலாம். பாராளுமன்றத்தில் செயற்படும் அனைத்து கட்சிகளும் இணைந்து ஒரு தேசியமட்டத்தில் செயற்பட்டிருந்தால் இந்தளவு விவாதங்களும், பின்னடைவுகளும் வராமல் இவ்வளவு இழப்புக்களையும் தவிர்த்து இந்த நாட்டை முன்னேற்றி சென்றிருக்கலாம்.

தற்பொழுது மிக மோசமான ஒரு பொருளாதார நிலைமை. மக்கள் வேலை வாய்ப்பில்லாமல் தொழில் இல்லாமல் உழைப்பில்லாமல் சாதாரண மக்கள் மிக மோசமான வறுமைக்கு முகம்கொடுக்கின்றார்கள். இந்த வக்சீன் அதாவது கொரோனா வைரஸை நோய் எதிர்ப்பு சக்தி அதை மொடோனா, சைனோபாம், அஸ்ரா போன்ற பல மருந்துகள் தற்பொழுது வந்திருக்கி ன்றது. அவற்றை தற்பொழுது தான் பாரதூரமான உச்சநிலையடைந்த நோய் தொற்றுக்கு பின்னர் தான் அந்த மருந்துகளை நாம் பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றோம். இந்த அரசு அதை மிக மோசமான பிடிமானங்கள் இல்லாமல் பல நிபுனர்கள் நோய் பரவுவதற்கு காரணமாக இருந்திருக்கின்றார்கள். எனவே தான் இந்த காலத்தில் நாங்கள் ஜனநாயக நடவடிக்கைகள் ஒரு அரசியல் இயக்கத்தில் நாங்கள் போர் முடிந்ததன் பின்னர் ஜனநாயக ரீதியில்தான் நாங்கள் எங்களுடைய அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கலாம். அந்த நடவடிக்கைகளை அதாவது ஜனநாயக ரீதியில் நாங்கள் செயற்படுவதற்கு போக்குவர த்து வசதியில்லை, கொரோனா தொற்றிவிடும் என்ற அச்சம் இரண்டுமே கூடிகதைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாக இருக்கின்றது. ஆகவே இந்த நேரத்தில் நாங்கள் அரசியல் நடவடிக் கைளில் ஜனநாயக ரீதியில் செயற்படுவது கூட அரிதாகிவிட்டது. இந்த நேரத்தில் தற்பொழுது நாங்கள் இரண்டு விடயங்களைப்பற்றி குறிப்பிட்டோம். ஒன்று மனித உரிமைப்பேரவையிலே 46 - 1 சென்ற மார்ச் மாதம் வரையில் நிறைவேற்றிய தீர்மானம் மறுபடியும் 46 - 1 தீர்மானம் வந்ததன் பின்னர் அதைப்பற்றிய மனித உரிமைப்பேரவையிலே ஆணையாளர் ஒரு வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கின்ற ஒரு கால கட்டம் இடம்பெற்றிருக்கின்றது. அறிவிக்கப்பட்டபடி அது நடந்திருக்கின்றது. அந்த வாய்மூல அறிக்கையில் ஒரு புதிய தீர் மானமல்ல 46 - 1 இன் கீழ் அரசு அந்த தீர்மானங்களின் அடிப்படையில் ஏற்கன வே 30 - 1 இல் இருந்து 34 - 1 தற்பொ ழுது 46 - 1 என்ற அளவுக்கு பல தீர்மா னங்கள் வந்திருக்கின்றது. அந்த தீர்மா னங்களில் எந்தளவு தூரம் இந்த அரசு நடைமுறைப்படுத்தியிருக்கின்றது. முக்கியமாக நல்லிணக்கம், மீள நிகழாமை, பொறுப்பு கூறுதல், PTA என்று சொல்லப்படுகின்ற பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வேண்டும், இராணுவ மயமாக்குகின்ற நிர்வாக நடவடிக்கைகள் நீக்கப்பட வேண்டும் என்பன எல்லாம் தற்பொழுது முன்னணிக்கு வந்திருக்கின்றன. வாய்மூல அறிக்கையில் கூட அவை எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அதைவிட அவசரகால தடைச்சட்டம் விதிக்கப்பட்ட விடயம் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் மிக கவலையடைந்து அக்கறை கொண்டு தன்னுடைய கவலைகளை வெளிப்படுத்தியிருக்கின்றார். அதைவிட இந்த மனித உரிமைப் பேரவையினுடைய ஆணையாளர் இன்னொரு விடயத்தை குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு முன்னர் இருந்த இலங்கை ஜனாதிபதி சிறிசேனா அவர்களின் இறுதிகாலத்தில் ஐ.நாவிலே நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையினுடைய தீர்மானத்திலிருந்து வெளியேறுகின்றோம் என அறிவித்ததை நாங்கள் நினைவுகூறலாம். இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ச வந்ததன் பின்னர் இந்த அரசாங்கமும் மனித உரிமைப்பேரவை தீர்மானங்களில் இருந்து நாங்கள் வெளியேறுகின்றோம் நாங்கள் இருக்க மாட்டோம் என அறிவித்திருந்தார்.

தற்பொழுதும் 46 - 1 தீர்மானம் மார்ச் மாதமளவில் நிறைவேற்றியதன் பின்னர் வாய்மூலமான அறிக்கை ஒன்றை செப்டம்பர் 13 ஆம் திகதி மனித உரிமை பேரவையினுடைய ஆணையாளர் இருந்த நேரத்தில் அரசர் தரப்பிலே நாங்கள் வெளித்தலையீடுகளை ஐக்கிய மனித உரிமைப்பேரவையாக இருந்தாலும் அவர்களின் அறிக்கைகளின் தீர்மானங்களின்படி இலங்கைமீது வெளித் தலையீடுகளை ஏற்கமாட்டோம் என சொல்லியிருக்கின்றார். ஆனால் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் முன்பு மனித உரிமைப்பேரவையின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையினுடைய தீர்மானங்களை ஏற்கமாட்டோம் என்று சிறிசேன ஜனாதிபதியும் அரசாங்கமும் கோட்டபாய ராஜபக்ச உட்பட மனித உரிமை பேரவையை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று சொன்னவர்கள் அண்மையில் கொரோனா வைரஸின் நெருக்கடிக்காகவும் ஐ.நா மனித உரிமைப்பேரவை எடுத்த தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கின்ற நேரத்தில் ஜனாதிபதி ஒரு அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றார் நாங்கள் ஐ.நா மனித உரிமைப் பேரவையோடு இலங்கை இணங்கி வேலை செய்வதற்கு ஆயத்தம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதை மனித உரிமைப்பேரவை ஆணையாளர் தன்னுடைய வாய்மூல அறிக்கையிலும் முதலாவதாக குறிப்பிட்டது அரசாங்கம் தற்பொழுது மனித உரிமைப்பேரவையோடு ஐ.நாவோடு இணங்கி வேலை செய்வதற்கு வாக்குறுதியளித்திருக்கிறார்கள் என்பது தான் முதல்வரை முறை அவர் குறிப்பிட்ட விடயம். ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அவர் அதை அப்படி குறிப்பிட்டாலும் நாங்க ளும் நம்பிக்கைகொள்ளவில்லை அவர் ஒரு இராஜதந்திரி என்ற முறையிலும் ஐ.நா மனித உரிமைப்பேரவையினுடைய ஆணையாளர் என்ற ரீதியிலும் அவரிற்குரிய அனுபவத்தின்படி ஏற்கனவே எடுத்த தீர்மானங்களோடு தாங்கள் விலகியிருக்கின்றோம் என்று சொன்ன அரசு அதனுடைய ஜனாதிபதி உங்களோடு நாங்கள் சேர்ந்து வேலை செய்கின்றோம் என்பதை அவர் பற்றிக்கொண்டிருக்கின்றார்.

அதுவொரு இராஜதந்திர நடவடிக்கை. அதைப்பற்றி அவர் குறிப்பிடுகின்ற பொழுது நீங்கள் சொன்னதை நாங்கள் வரவேற்கின்றோம் ஆனால் அதை நிறைவேற்றுவதை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம் என்றும் ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றார். அதைவிட மனித உரிமைப்பேரவை ஆணையாளர் பல விடயங்களை குறிப்பிட்டிருக்கின்றார் 46 - 1 க்கு பின்னரான நிலையில். குறிப்பாக இந்த அவசரகால சட்டம் நிறைவேற்றியதை அதுவொரு பரந்துபட்ட அளவிலே இருக்கின்றது. எதிர்காலத்தில் ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பமளிக்கப் போகின்றது. அதைவிட அரசினுடைய இராணுவ நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தலைமை உள்ளவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஓய்வு பெற்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அடுத்து PTA பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை அவை முக்கியமானவை. சிறைச்சாலைகளில் அதனடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் நீண்டகாலமாக இருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட்டவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. என்று எல்லாம் பல விடயங்களை அவர் குறிப்பிட்டு சென்ற மனித உரிமைப்பேரவையிலே ஒரு முக்கியமான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. பொறுப்பு கூறல் என்ற விடயத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த அரசாங்கத்தில் மனித உரிமை பேரவை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. பொறுப்புகூறல் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஏனைய நாடுகளுடன் சேர்ந்து இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுத்து அதை ஏற்றுக் கொள்ள வைப்பதும் அதை நடைமுறைக்கு கொண்டுவருவதும் என்ற தீர்மானம் இறுதியாக சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கான நிதியையும் ஏனைய நாடுகளில் இருந்தும் அவர் அந்த வாய்மூல அறிக்கையில் நிதி வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதையும் நாங்கள் பார்க்க முடியும்.

அப்படி பல விடயங்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தாலும் இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக ஒரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று அதாவது பௌத்த சிங்கள பேராண்மைத்துவ அடிப்படையில் தாம் ஒரு அரசியலமைப்பை உருவாக்கப்போகின்றோம் என்று சொன்னதும். ஆனால் நாட்டிலே இந்த கொரோனா வைரஸையும் வைத்துக்கொண்டு இராணுவத்தினுடைய நிர்வாக நடவடிக்கைகளை பலமாக உருவாக்கிக்கொண்டு வருகின்ற அல்லது இராணுவத்திற்கு அதிகாரங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் நாட்டில் ஜனநாயகம் அடக்கி ஒடுக்கப்படுகின்ற நிலைமையும் கைதிகள் அதிகரித்துக்கொண்டு செல்லும் நிலைமையும். காணப்படுகின்றன. இவ்வாறெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன அதற்கான ஒரு எச்சரிக்கை இவையெல்லாம் நடைபெறுகின்றன நாங்கள் கவனித்துக்கொண்டிருக்கின்றோம் பல விடயங்களில் கவலையடைந்து கொண்டிருக்கின்றோம் என்ற விடயத்தையும் அவர் குறித்திருக்கின்றார்.

ஆகவே இந்த 46 - 1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதனுடைய முன்னேற்றம் பெருமளவில் நடைபெறவில்லை என்ற அக்கறையையும் எதிர்பார்ப்பு நிறைவெற்றப்படவில்லை என்பதையும் அதை தாங்கள் மிக கவனமாக கண்கானித்து வருகின்றோம் என்பதனையும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தொடரும்...

**இரணியன்**

# ஆயுதம் ஏந்தி போராடும் நிலையில் தற்பொழுது உள்ள இயக்கங்கள் இல்லை

## ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்

**கேள்வி:- இன்று கொரோனா வைரஸின் தாக்கம் ஒருபுறமிருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபையினுடைய அவகோள் பற்றியதுமான பரபரப்பு செய்திகளும் அதில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றதுமான நடவடிக்கையும் சென்றுகொண்டு இருக்கின்றன. அந்த வகையில் மிச்சல் பெச்சலெட் அவர்களின் அறிக்கையானது இலங்கை அரசிற்கு ஒரு ஆதரவை கொடுக்கின்ற ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. இதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில் : முதலாவது ஜெனீவாவில் தமிழ் மக்களினுடைய பிரச்சனை கொண்டு போகப்பட்டதன் காரணம் இலங்கையில் ஏற்பட்ட யுத்தம். அந்த யுத்தத்தால் ஏற்பட்ட பல்வேறுபட்ட பிரச்சனைகள். இலங்கை இராணுவம் இழைத்த யுத்த குற்றங்கள். மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இவை போன்றவை நடைபெற்றிருக்கின்றது என்பன பிரான்கி மூன் என்பவர் நியமித்த ஒரு நிபுணர்குழு (எக்ஸ்பேட் கொமிட்டி) ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். இலங்கை அரசாங்கம் யுத்த குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் அதைப்பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என்று. அதனடிப்படையில் தான் ஜெனீவாவில் இந்த பிரச்சனை எடுக்கப்பட்டது. பேசப்பட்டது. அதனைத் தொடர்ந்து தான் ஜெனீவாவில் இந்த விடயங்கள் தொடர்பான பல்வேறுபட்ட தீர்மானங்களும் வந்தது.

ஆகவே அந்தடிப்படையில் தற்பொழுது வந்திருக்கும் இறுதி அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாய்மொழி அறிக்கையை பார்க்கும் பொழுது இலங்கையினுடைய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அவர்கள் 13 பக்க அறிக்கை ஒன்றை கொடுத்திருக்கின்றார். அந்த 13 பக்க அறிக்கையில் தாங்கள் பல விடயங்களை செய்வதாக குறிப்பிட்டார். அதில் ஒரு விடயம் காணாமலாக்கப்பட்டோர் விடயம் சம்பந்தமான பல்வேறுபட்ட அலுவலகங்கள் திறக்கப்படுவதாக சொல்லப்படுகின்றது. காணாமலாக்கப் பட்டவர்களுக் காக 900 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கபட்டிருப்பதாகவும் அதிலே 200 மில்லியனுக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

அதைப்போல் பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ளவற்றை நீக்குவதற்காக ஒரு கொமிசன் நியமிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட LLRC போன்றவற்றுள் உள்ள விடயங்களை ஆராய்ந்து தமக்கு அறிவுறுத்துவதற்கு இன்னுமொரு கொமிசன் நியிமிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆகவே தாங்கள் பல விடயங்களை செய்வதாக ஒருவிதமான மாயையை உருவாக்கி 13 பக்க அறிக்கை ஒன்று எழுதப்பட்டு அது UNHR இனுடைய ஆணையாளருக்கும் பல்வேறுபட்ட சர்வதேச தூதுவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கையில் குறிப்பிட்ட பல விடயங்களை ஆணையாளர் சுட்டிக்காட்டி இலங்கை அரசாங்கம் இவ்வாறு செய்கின்றது என்பதனை தாங்கள் குறித்துக்கொண்டிருப்பதாகவும் அதனுடைய டெவலப்மன்டை பார்த்துக்கொண்டிருக்கின்ற பாணியில் தான் இந்த அறிக்கை வந்திருக்கின்றது. ஆனால் இதே காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது மேய்ச்சல் நிலங்களை படைத்திருக்கிறது மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாமல் பல்வேறுபட்ட தடைகளை உருவாக்கியிருக்கின்றது. புனித சின்னங்கள் என்ற பெயரில் சைவ கோவில்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு பௌத்த கோவில்கள் வந்திருக்கின்றது இப்படி இவையெல்லாம் ஆவணமயப்படுத்தப்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டும் இருக்கின்றது.

ஆகவே அரசாங்கம் சொன்ன விடயங்களை குறிப்பெடுத்துக் கொண்டவர்கள் அதே அறிக்கையில் இந்த விடயங்கள் நடைபெற்றிருப்பதாக குறிப்பிட்டிருந்தால் அது நிச்சயமாக சரியான பார்வையாக இருந்திருக்கும் என்பது எங்களுடைய அபிப்பிராயம். ஆனால் அதே நேரத்தில் இலங்கை அரசாங்கம் தொடர்பாக சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இராணுவமயப்படுத்தப்படுகின்றது என சொல்லப்படுகின்றது. இங்கு ஜனநாய விடயங்கள் மறுக்கப்படுவதாக சொல்லப்படுகின்றது. முன்னரைவிட தற்பொழுது மாணவர்கள் மதகுருமார்கள் கூட விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள் என சொல்லப்படுகின்றது. அது பொதுவாக இலங்கை ஒரு இராணுவ மயப்படுத்தப்படுகின்றது ஜனநாயகம் மறுக்கப்படுகின்றது போன்ற பல விடயங்கள் சொல்லப்படுகின்றது. ஆனால் குறிப்பாக 46 தீர்மானத்தை எடுத்தாலும்கூட அது தமிழ் மக்கள் பிரச்சனை தொடர்பாக இலங்கை செய்ய வேண்டிய பல விடயங்களை அங்கு சுட்டி காட்டியிருக்கின்றது.

திருகோணமலையில் ஒரு துறை முகம் இருக்கின்றது காங்கேசன்துறையில் ஒரு துறைமுகம் இருக்கின்றது இவ்வளவும் இருக்கையில் அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகம் தேவையா? இந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை உருவாக்கும் பொழுது கொமர்ஷியலாக வர்த்தக ரீதியாக எவ்வளவு இலாபத்தை சம்பாதித்துக்கொடுத்தோம் என்று பார்க்கும் பொழுது எந்தவிதமான இலாபங்களும் மத்தளை விமான நிலையத்தில் இருந்தது இல்லை அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் இல்லை. ஆகவே அதற்கு முதலீடு என்பது பில்லியன் கணக்கான டொலர்ஸை சீன அரசாங்கம் போட்டார்கள். ஆகவே வர்த்தக



ரீதியாக ஒரு பிரயோசனமற்ற விடயத்திற்கு பல பில்லியன்களை நீங்கள் கடனாக பெற்று போட்டது என்பது நீங்கள் அந்த கடனை திருப்பி கொடுக்க வேண்டும். எனவே ஒரு கட்டத்தில் சீன அரசாங்கம் மீள கடனை கேட்டது. ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு வழியில்லை அப்பொழுது துறைமுகத்தை சீனாவிற்கு 99 வருட குத்தகைக்கு எழுதிக்கொடுத்தார்கள். இதே போன்று கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதி அது 89 வருட குத்தகைக்கு சீனாவிற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதே போன்று போர்ட்சிற்றி அந்த கடல் நிரப்பப்பட்டு நிலமாக கொண்டுவரப்பட்டு அதனுடைய ஒரு பகுதி சீனாவிற்கு விற்கப்பட்டிருக்கின்றது. இலங்கை பெற்றுக்கொண்ட கடன்கள் என்பது அர்த்தமில்லாத கடன்களாக எந்தவிதத்திலும் இலாபத்தை உருவாக்கும் கடன்களாக இல்லை. ஒன்று யுத்த அழிவுக்கு பின் கடன் பெற்றார்கள். யுத்தத்தின் மூலம் இங்கு ஏற்பட்டது அழிவே தவிர யுத்த காலத்தில் அவர்கள் வாங்கிய கடன்கள் மூலம் இங்கு பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படவில்லை. வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. இந்த நாடு அழிக்கப்பட்டது மக்கள் அழிக்கப்பட்டார்கள் கொலை செய்து குவிக்கப்பட்டார்கள் அதைத்தவிர அந்த கடனால் இங்கு எதுவும் நடக்கவில்லை. அதே போன்று துறைமுகத்தை கட்டினார்கள். விமானநிலையத்தை கட்டினார்கள் அதனாலும் எந்தவிதமான இலாபமும் வரவில்லை.

இறுதியாக இன்னுமொரு நாட்டின் தேவைக்காக அது ஒப்படைக்கப்படுகின்றது. ஆகவே அந்த நாடு இங்கு குடிகொள்ளும் பொழுது அது இந்தியா போன்ற அயல் நாட்டுக்கு நிச்சயமாக பாதுகாப்பு கெடுபிடிகளை உருவாக்கும் அது அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கைக்கும் தெரிந்த விடயம். இப்பொழுது நாங்கள் கேட்டால் என்ன சொல்வார்கள் இங்கு சீன இராணுவம் வராது என்றோ சீன நீர்மூழ்கி கப்பல் வராது என்றோ சொல்லலாம். ஆனால் உண்மையான விடயம் என்ன வென்றால் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இன்றோ அல்லது நாளையோ சீனாவினுடைய கடற்படையோ சீனாவினுடைய இராணுவமோ நீர்மூழ்கியோ வராமல் இருக்கலாம் ஆனால் 99 வருட காலத்தில் இவை யெல்லாம் நடக்காது என்று சொல்ல முடியாது. 10 வருடத்தால் அல்லது 30 வருடங்களால் கூட நடக் கலாம். ஆகவே இது நிச்சயமாக இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு இதுவொரு பிரச்சனைக்குரிய விடயமாகத்தான் இருக்கின்றது தேசிய பாதுகாப்பிற்காக அதில் மாற்றுக்கருத்துகிடையாது. தனக்கு எதிராகத்தான் இலங்கை அரசாங்கம் இதனை செய்திருக்கின்றது என்று இந்திய அரசாங்கத்திற்கும் தெரியும் இந்தியா இதனை புரிந்து கொள்ளாத விடயமல்ல.

ஆகவே இலங்கை அரசாங்கத்தினுடைய இந்த பொருளாதார கொள்கைகள் நடவடிக்கைகள் என்பது நிச்சயமாக இலங்கையில் ஒரு பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு, வேலையின்மையை போக்குவதற்கு, வறுமையை ஒழிப்பதற்கு ஏற்ப இந்த பொருளாதார கட்டமைப்புக்கள் இல்லை. வேண்டிய கடன்கள் எல்லாம் அர்த்தமற்ற கடன்கள். இன்று அதற்கு நாங்கள் வட்டி கட்டிக் கொண்டிருக்கின்றோம். இது என்ன தேவைக்காக இந்த கடன் பெறப்பட்டது எதற்காக நாங்கள் கடனை திருப்பி கொடுக்க வேண்டும். இதனால் எங்களுக்கு எந்த இலாபமும் இல்லை.

**தொடரும்...**

**இரணியன்**




# பிராந்திய செய்திகள்



## யாழில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம்- மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்துபவர் மீது கொலைவெறித் தாக்குதல் மேற்கொண்ட வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மேலும், யாழில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து தப்பித்து இந்தியாவில் தங்கியுள்ள தேவா மற்றும் ஜெனி இயக்குவதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர். மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக பழக்கடை நடத்தும் மானிப்பாய் லவ் ஒழுங்கையைச் சேர்ந்த இந்திரன் நிரோஷ்குமார் (வயது-27) என்பவர் மீது கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதாவது, ஊரடங்கு நடைமுறையில் இருந்தவேளை யில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



குறித்த சம்பவத்தில் கழுத்து, காலில் பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய அவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். மேலும், சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்நிலையிலேயே வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரை, யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் இன்று கைது செய்துள்ளனர். சுன்னாகம், மல்லாகம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 25-28 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சந்தேகநபர்களுக்கு வாள்களை செய்து கொடுத்த குற்றச்சாட்டிலும் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் குறிப்பி ட்டுள்ளனர். அத்துடன் சந்தேகநபர்களிடமிருந்து 3 வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் வன்முறைகளில் ஈடுபட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற தேவா மற்றும் ஜெனியும் அச்சுறுத்திக் கூறியதால்தான், இந்த தாக்குதலை தாம் செய்ததாக விசாரணைகளில் சந்தேகநபர்கள் கூறியுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் அனைவரும், விசாரணைகளின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒக்டோபர் முதலாம் திகதி கட்டுப்பாடுகளுடன் நாடு திறக்கப்படும்!

ஒக்டோபர் முதலாம் திகதி நாடு திறக்கப்படும் என நம்புவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அன்று (சனிக்கிழமை) தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் அமுலில் உள்ள முடக்க கட்டுப்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளன.

இந்நிலையில் சுகாதார வழிகாட்டுதல்களால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நாடு திறக்கப்படும் என அவர் கூறியுள்ளார். இருப்பினும் எதிர்வரும் வியாழக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அடுத்த வாரத்தில் நாடு மீள திறக்கப்பட்டாலும் அது குறித்த பின்பற்ற வேண்டிய பரிந்துரைகள் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்படவுள்ளதாக அன்று இராணுவ தளபதி அறிவித்திருந்தார்.



## மன்னாரில் திலீபனின் நினைவு நிகழ்வுக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு, எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெற இருப்பதாக கூறி, அந்நிகழ்விற்கு தடை உத்தரவை பிறப்பிக்குமாறு மன்னார் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். அதாவது, தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ் சிவகரன்தான், குறித்த நினைவேந்தலை மேற்கொள்ள உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சிவகரனுக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பின் அடிப்படையில், அன்று (வெள்ளிக்கிழமை) நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகி இருந்தார். இதன்போது, சிவகரன் சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.சிராய்வா மற்றும் சட்டத்தரணி அன்ரனி றொமோசன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணிகள், தமது சமர்ப்பணத்தை முன்வைத்தனர். அதாவது, மன்னர் பொலிஸார் தாக்கல் செய்தது போல் மக்களை ஒன்று சேர்த்து நினைவேந்தலை நடத்த எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் பொலிஸார் கற்பனையில் பொய்யான வழக்கை மன்றில் தாக்கல் செய்துள்ளனர் எனவும் சமர்ப்பணத்தை சட்டத்தரணிகள் முன்வைத்தனர்.

ஆகவே, பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான், “சிவகரன் என்பவர் எதிர்வரும் 26ஆம் திகதி நித்திலம் பதிப்பகத்தில் மக்களை ஒன்று கூட்டி எவ்வித ஒன்று கூடலையும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார். ஆகவே, தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் எதிர்வரும் 1 ஆம் திகதி வழக்கை ஒத்தி வைக்கின்றேன்” என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசி?

எதிர்வரும் காலத்தில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் தடுப்பூசியின் மூன்றாம் டோஸான பூஸ்டர் தடுப்பூசியை செலுத்த வேண்டி ஏற்படும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.

சினோபார்ம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட இளம் வயதினருக்கு பூஸ்டர் தடுப்பூசி தேவைபடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் 50 வயதிற்கு குறைந்தவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்த வேண்டியது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# சினிமா துளிகள்






கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசனில் கலந்து கொண்டதன் மூலம் பிரபலமான ஓவியா, அடுத்ததாக யோகிபாபு உடன் ஜோடி சேர உள்ளார்.


தமிழ் சினிமாவில் முன்னணி காமெடி நடிகராக வலம் வருபவர் யோகி பாபு. தற்போது இவர் இல்லாத படங்களே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவிற்கு பல படங்களில் பிசியாக நடித்து வருகிறார். இவர் முதன்மை கதா பாத்திரத்தில் நடித்த கோலமாவு கோகிலா, கூர்கா, மண்டேலா போன்ற படங்களும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், நடிகர் யோகிபாபு அடுத்ததாக முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க உள்ள படம் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, அப்படத்தை அன்கா மீடியா நிறுவனம் தயாரிக்க உள்ளதாம்.

இப்படத்தில் யோகிபாபுவுக்கு ஜோடியாக நடிகை ஓவியா நடிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இப்படத்தின் பூஜை வருகிற செப்டம்பர் 24-ந் திகதி நடைபெற உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. நடிகை ஓவியா, யோகிபாபுவுக்கு ஜோடியாக நடிப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## படங்களுக்கு தமிழில் தலைப்பு – சிவகார்த்திகேயன் விருப்பம்

சினிமா படங்களுக்கு தமிழில் தலைப்பு வைக்க நடிகர் சிவகார்த்திகேயன் வற்புறுத்தி உள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, "நான் நடித்துள்ள டாக்டர் படம் திரையரங்குகளில் வெளியாகிறது. தியேட்டர்களில் ரிலீசாக வேண்டும் என்பது தயாரிப்பாளர் எடுத்த முடிவு. தியேட்டரில் டாக்டர் படம் வெளியாக வேண்டும் என்பது தான் எனது ஆசையாகவும் இருக்கிறது.



எது சரி என்று படுகிறதோ அதை செய்யுங்கள் என்று தயாரிப்பாளரிடம் கூறி இருந்தேன். தியேட்டர்களில் படங்களை பார்ப்பதுதான் கொண்டாட்டமாக இருக்கும். எனது டாக்டர் படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகாமல் தியேட்டர்களில் வெளியாவது மகிழ்ச்சியாக உள்ளது. தற்போது தயாராகும் படங்களை வியாபாரம் செய்வது என்பது கஷ்டமாக உள்ளது. படம் திரைக்கு வந்தால் தான் திரையுலகை நம்பி இருப்பவர்களுக்கு வேலை நடக்கும்.

நாய்சேகர் தலைப்பு சர்ச்சையாகி உள்ளது. இந்த தலைப்பு குறித்து வடிவேலுவிடம் சதீஷ் பேசி இருக்கிறார். சதீஷ் கதாநாயகனாக நடிப்பதால் பெரிய தலைப்பு தேவைப்படுகிறது. ஆனால் வடிவேலுவுக்கு அது தேவை இல்லை. எந்த தலைப்பு வைத்தாலும் வடிவேலு படங்களுக்கு சிறப்பாகவே இருக்கும். படங்களுக்கு தமிழில் தலைப்பு வைப்பது நல்லது. நானும் எனது படங்களுக்கு தமிழில் தலைப்பு வைக்கும்படியே சொல்லி வருகிறேன்" என்றார்.

## நேரடியாக ஓடிடி-யில் வெளியாகிறது - லிப்ட்'.... ரிலீஸ் திகதி அறிவிப்பு

வினீத் வரப்பிரசாத் இயக்கத்தில் உருவாகி உள்ள லிப்ட் படத்தில் கவினுக்கு ஜோடியாக பிகில் பட நடிகை அம்ரிதா நடித்துள்ளார்.

'சரவணன் மீனாட்சி' சீரியலில் நடித்து பிரபலமான கவின், கடந்த 2017-ம் ஆண்டு வெளியான 'நட்புன்னா என்னானு தெரியுமா' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார். இதையடுத்து பிக்பாஸ் நிகழ்ச்சியின் 3-வது சீசனில் கலந்து கொண்டதன் மூலம் ஏராளமான ரசிகர்களைப் பெற்ற கவின், தற்போது வினீத் வரப்பிரசாத் இயக்கியுள்ள 'லிப்ட்' படத்தில் ஹீரோவாக நடித்துள்ளார். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக பிகில் பட நடிகை அம்ரிதா நடித்துள்ளார்.

ஈகா என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்திருக்கும் இந்தப் படத்தை கடந்த ஏப்ரல் மாதம் திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டு இருந்தனர். அந்த சமயத்தில் கொரோனா இரண்டாவது அலை வேகமாக பரவியதால், இப்படத்தை திட்டமிட்டபடி வெளியிட முடியாமல் போனது. இதையடுத்து லிப்ட் படத்தை நேரடியாக ஓடிடி-யில் வெளியிட முடிவு செய்த படக்குழு, இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இந்நிலையில், லிப்ட் படத்தின் ஓடிடி ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி இப்படம் வருகிற அக்டோபர் 1-ந் திகதி ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் நேரடியாக வெளியாக உள்ளது. மேலும் லிப்ட் படத்தின் டிரெய்லர் வெளியிடப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.





## விஜய் சேதுபதியின் 96 படம் இந்தியில் ரீமேக்

தமிழில் விஜய் சேதுபதி, திரிஷா நடித்து 2018-ல் வெளியான படம் 96. இந்த படத்துக்கு வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் வரவேற்பு கிடைத்தது. பாடல்களும் ரசிகர்களை கவர்ந்தன. இதையடுத்து 96 படத்தை பிற மொழிகளிலும் ரீமேக் செய்ய பட அதிபர்கள் ஆர்வம் காட்டினர்.


தெலுங்கில் ஜானு என்ற பெயரில் ரீமேக் ஆனது. இதில் விஜய் சேதுபதி கதாபாத்திரத்தில் சர்வானந்தும், திரிஷா வேடத்தில் சமந்தாவும் நடித்தனர். 96 படத்தில் நடித்த கவுரி கிஷனும் ஜானு படத்தில் வந்தார். இந்த படம் ஆந்திராவில் சுமாராகவே ஓடியது. கன்னட மொழியிலும் 96 படம் ரீமேக் செய்யப்பட்டு திரைக்கு வந்தது.

தொடர்ந்து இந்தியிலும் 96 படத்தை ரீமேக் செய்ய பேச்சுவார்த்தைகள் நடந்தன. தற்போது இந்தி ரீமேக் உரிமையை அஜய் கபூர் வாங்கி உள்ளார். இந்தி 96 படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடக்கிறது. விரைவில் படப்பிடிப்பை தொடங்க உள்ளனர்.





# பல்சுவை கதம்பம்



## விட்டமின்கள் ஏராளமாக நிறைந்துள்ள ஒலிவ் எண்ணெய் !!

ஒலிவ் எண்ணெய்யை இரவு தூங்கப்போவதற்கு முன்னர் முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து மறுநாள் காலையில் முகத்தை கழுவி னால் ஏராளமான நன்மைகளை பெறலாம்.

ஒலிவ் எண்ணெய்யில் தான் விட்டமின்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் இயற்கையான ஃபேட்டி ஆசிட்டுகள் அடங்கியுள்ளன. இந்த எண்ணெய் அனைத்து வகையான சருமத்தினருக்கும் ஏற்ற ஒன்று. இதில் ஆன்டி-ஆக்ஸிடன்ட் பொருள் ஏராளமாக இருப்பதால் தான், இது சரும பராமரிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒலிவ் எண்ணெய்யில் சருமத்தின் ஆரோக்கியத்திற்கு தேவை யான விட்டமின் ஈ மற்றும் ஏ ஏராளமாக நிறைந்துள்ளது. எனவே தினமும் இரவில் ஆலிவ் எண்ணெய்யை கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால், பாதிக்கப்பட்ட சரும செல்கள் புதுப்பிக்கப்பட்டு, முகம் புத்துணர்ச்சியுடன் அழகாக காணப்படும்.

தழும்புகள் மறையும் முகத்தில் ஏதேனும் தழும்புகள் இருந்து, அதனைப் போக்க வேண்டுமானால், தினமும் இரவில் ஒலிவ் ஆயிலைக் கொண்டு மசாஜ் செய்து வாருங்கள்.

தினமும் ஒலிவ் எண்ணெய் கொண்டு மசாஜ் செய்வதன் மூலம், அதில் உள்ள விட்டமின் ஈ, சரும செல்கள் சீரழிவடைவதைத் தடுத்து, சருமம் விரைவில் முதுமைத் தோற்றம் அடைவதைத் தடுக்கும். மேலும் ஒலிவ் எண்ணெய்யில் உள்ள ஸ்குவாலின் அமிலம் சருமத்தின் நெகிழ்வுத் தன்மையை அதிகரித்து, சருமம் தளர்வதைத் தடுத்து, இளமையுடன் வைத்துக் கொள்ள உதவும்.

மிகுந்த வறட்சியான சருமம் என்றால், ஆலிவ் எண்ணெய்யை கொண்டு தினமும் இரவில் சருமத்தை மசாஜ் செய்து வாருங்கள். இப்படி தினமும் செய்வதன் மூலம், சரும வறட்சி ஏற்படுவதைத் தடுக்கலாம்.

பொதுவாக மசாஜ் செய்தால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். அதிலும் தினமும் இரவில் ஆலிவ் எண்ணெய் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால், முகத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து, பொலிவான முகத்தைப் பெறலாம்.

## முகத்தில் எண்ணெய் வழியாமல் தடுக்க

பப்பாளியை அரைத்து முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் நீரில் கழுவ வேண்டும்.

இதனால் பப்பாளி சருமத்துளைகளை ஆழமாக சுத்தம் செய்வதோடு, எண்ணெய் சுரப்பையும் சரிசெய்ய உதவும்.

எண்ணெய் பசை சருமத்தினருக்கு சந்தனம் மிகச்சிறந்த பொருள். சந்தனம் சருமத்தில் உள்ள அழுக்குகளை முற்றிலும் வெளியேற்றி, சரும நிறத்தை அதிகரிக்கும்.

அத்தகைய சந்தன பவுடரை மஞ்சளுடன் சேர்த்து மாஸ்க் போடுவது எண்ணெய் பசை சருமத்தினருக்கு நல்லது.

அதற்கு சந்தன பவுடர் மஞ்சள் தூளை சரிசம அளவில் எடுத்து, நீர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

முகத்தில் எண்ணெய் பசை நீங்க துளசி, எண்ணெய் பசை சருமத்தினருக்கு மட்டுமின்றி, பருக்களைப் போக்கவும், இதர சரும பிரச்சனைகளை சரிசெய்யவும் உதவும்.

அதற்கு சிறிது துளசி இலைகளை எடுத்து, நீரில் கழுவி, அரைத்து பேஸ்ட் செய்து கொள்ளுங்கள்.

அதனுடன் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் மற்றும் 1 ஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.



## சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும் நேச்சுரல் டிப்ஸ் !!

சருமத்தின் நிறத்தை அதிகரிக்க வாழைப்பழமும் மிகவும் உதவியாக இருக்கும். அதுவும் வாழைப்பழம் ப்ரீ-ராடிக்கல்களிடமிருந்து நல்ல பாதுகாப்பு வழங்கி, முதுமையைத் தடுக்கும். அதற்கு வாழைப்பழத் தை மசித்து முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஒரேஞ் ஜூஸ் சருமத்தின் நிறத்தை மேம்படு த்தவும் உதவும். அதற்கு ஒரேஞ் ஜூஸ் 4 டேபிள் ஸ்பூன் எடுத்துக் கொண்டு, அத்துடன் 2 டேபிள் ஸ்பூன் முல்தானி மெட்டி சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். 1 டேபிள் ஸ்பூன் வெள்ளரிக்காய் சாற்றில் 2 டீஸ்பூன் தேன் கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவலாம் அல்லது வெள்ளரிக்காய் ஜூஸ், எலுமிச்சை ஜூஸ் மற்றும் ரோஸ் வாட்டரை ஒன்றாக கலந்து, முகத்தல் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவவும் செய்யலாம். இவற்றின் மூலமும் சருமத்தின் நிறத்தை அதிகரிக்கலாம்.


தயிரை தினமும் முகத்தில் தடவி வருவதன் மூலமும் சருமத்தில் உள்ள இறந்த செல்களை முழுமையாக நீக்கி சரும நிறத்தை மேம்படு த்தலாம். மேலும் தயிரில் லாக்டிக் ஆசிட் நிறைந்துள்ளதால், அவை சருமத்தின் பொலிவை அதிகரிப்ப தோடு, மென்மையையும் மேம்படுத்தும். உருளைக்கிழங்கை அரைத்து அதில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால், சருமத்தில் உள்ள தழும்புகள், கரும்புள்ளிகள், முகப்பருக்கள், இறந்த செல்கள் போன்றவை நீங்கி, முகத்தின் பொலிவு மற்றும் நிறம் மேம்படும்.



2 டேபிள் ஸ்பூன் தக்காளி ஜூஸில், 3 டீஸ்பூன் மோர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 30 நிமிடம் உலர வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவி, உலர வைக்க வேண்டும். இந்த செயல்முறையின் மூலமும் சரும த்தை வெள்ளையாக மாற்றலாம்.

# விடுதலைப்புலிகளுக்கும் சீனாவிற்குமிடையிலான ஒப்பந்தம்

கடந்தவார தொடர்ச்சி....



1.இறையாண்மை கொண்ட ஒரு அரசு இலங்கை. அது தனது நிலங்களை அடகு வைப்பதற்கு இலகுவில் தயாராக இருக்காது என்ற எடுகோள் சீனாவிடமிருந்து

2.அதுமாத்திரமன்றி தன்னாட்சி அதிகாரம் கொண்ட இறையாண்மை மிக்க நாட்டிற்கு சர்வதேச நாணய நிதியம். உலக வங்கி போன்ற அமைப்புகள் குறைந்த வட்டி வீதம். மற்றும் வட்டியில்லா கடன் வழங்குவதற்கு தயாராக இருக்கும். அதனால் சீனாவின் நிதியுதவி இலங்கைக்கு தேவைப்படாது.

மாறாக விடுதலைப்புலிளோ தனி நாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்து யுத்தம் செய்யும் ஒரு அமைப்பு. அத்தோடு உருவாக்கப்படும் புதிய நாட்டை நிர்வகிக்கவும் அதனை கட்டியெழுப்பவும் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்புக்களும் நிதிகளும் தேவை. இது இலகுவில் கிடைக்காது. இதனைப் பயன்படுத்தி இவர்களுக்கு ஆதரவளிப்பதனூடாக ஒரு பகுதி நிலத்தையோ. அல்லது பிரதேசத்தையோ கையகப் படுத்திக் கொள்ளலாம். இதனால்தான் விடுதலைப்புலிகளே சரியான தெரிவாகப் பட்டது சீனாவிற்கு.

3. ஏற்கனவே இந்திய-இலங்கை ஒப்பந்தம். மற்றும் அமெரிக்க தலையீடுகளை மீறி இலங்கை தமக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டை எடுக்காது எனச்சீனா கருதியது.

மாறாக புலிகள் இன்றும் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் தான் இருக்கிறார்கள் என்றும் அது பொதுவாகவே நம்பியது.

அதற்கும் அப்பால் சோழ சாம்ராஜ்யத்தின் மீது கொண்ட பற்றுதல் காரணமாகவே புலி சின்னத்தை அடையாளமாகக் கொண்டு போராட்டத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள் என்றும். இது ஒரு காலப்பகுதியில் இந்தியாவுக்கான ஒரு தலையிடியைக் கொடுக்க உதவும் என்றும் சீனா நம்பியது. காலப் போக்கில் இந்தியாவை பல துண்டுகளாக உடைக்கலாம் என்ற மனநிலையில் சீனா இருந்தது. பல இன மொழி மதங்களைக் கொண்ட பல மாநிலங்களின் கூட்டமைப்பாக இருக்கும் இந்தியாவில் ஏற்கனவே தனி நாட்டு பிரிவினையானது காஷ்மீர். பஞ்சாப் போன்ற மாநிலங்களில் கனன்று கொண்டிருக்கிறது. அதே போன்று ஆயுதப்போராட்ட குழுக்களாக மாவோயிஸ்டுக்கள் போன்ற அமைப்புகளும் செயல்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் தெற்கிலிருந்தும் ஒரு தலையிடியை கொடுக்கவும் சீனா எண்ணியிருந்ததாக தகவல்களுண்டு.

இனி தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் என்ன பதிலளித்தார்?. சீனாவின் பேரத்தை/Dealஐஏற்றுக்கொண்டாரா? இல்லை. தீர்கமாகவும். உறுதியாகவும். உடனடியாகவும் மறுதலித்துவிட்டார். ஏன் மறுதலித்தார்?

தனது மத்திய குழு உறுப்பினர்களிடம் பிரபாகரன் அவர்கள் சீன அரசின் இந்த வேண்டுகோளை மறுதலித்ததற்கான காரணங்களை பட்டியலிட்டார்.

1.இந்திய அரசுடன் குறிப்பாக காங்கிரசுடனும் அதன் வெளிநாட்டுக் கொள்கையுடன் எமக்கு முரண்பாடு உள்ளதே தவிர இந்திய மக்களுடன் தமக்கு எந்த வித ஒரு பகையும் இல்லை.

2.எமக்கு இந்தியா ஒரு தந்தை நாடு போன்றது. நாம் இந்திய மக்களுடன் மொழி. மத. கலாச்சார. உணவுப் பழக்கவழக்க. பண்பாட்டு ரீதியில் பின்னிப்பிணைந்தவர்கள் எனவும் சீனாவை இந்து சமுத்திர பிராந்தியத்தில் இருத்துவது இந்தியாவுக்கு நாம் செய்யும் துரோகம் எனவும் குறிப்பிட்டார்

3.அதைவிட எமது தமிழீழத்தனியரசின் தலைநகரம் திருகோணமலை. அதில் திருகோணமலைத் துறைமுகம் எமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஒரு வர்த்தகப்புள்ளி. அதை நாம் எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார்

4.அயல்நாடான இந்தியாவுடனான நட்புறவே எமது பலமாக அமையும் எனவும். தவிர சீனாவிற்கு திருகோணமலை துறைமுகத்தை கொடுப்பது எமது இறையாண்மையை அடகு வைப்பதற்குச்சமம். அது மாத்திரமன்றி எம் மீது சீனாவின் ஆதிக்கம் வளர்வதற்கும் அது காரணமாக அமைந்துவிடும். இதிலும் பார்க்க நாம் சிங்கள அரசிற்கு அடிமையாக இருந்து விடலாமே என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார் .

5.அதுமாத்திரமன்றி இந்தியா அமெரிக்கா ஐரோப்பிய வல்லரசுகளின் அதிருப்திக்கும் வெறுப்பிற்கும் உள்ளாக வேண்டிவரும் என்றும் பதிலுரைத்தார். இதனால் தான் எத்தகைய சிறு தயக்கமும். சலனமுமின்றி தீர்க்கமாக அதனை மறுதலித்தார் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். இது நடைபெற்றது 2001ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் அதாவது விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இது நடந்தது.

இந்த நிலையில் சீனாவின் அணுகு முறையை கேள்வியுற்ற அமெரிக்க. இந்திய அரசுகள் சீன அனுசரணையோடு விடுதலைப்புலிகளின் தனியரசை அமைத்தால் அது முதலாளித்துவ நாடுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே அமையும் என கருதினர். குறிப்பாக வட கொரியா போன்ற ஒரு அச்சறுத்தும் சக்தியாக விடுதலைப்புலிகளின் தனியரசு அமைந்துவிடும் என்று அவர்கள் கருதத் தொடங்கினார்.

அதுமாத்திரமன்றி கறுப்புச் சந்தையில் ஏற்கனவே விடுதலைப்புலிகள் சீன அரசின் ஆயுத உற்பத்திகளை வாங்கத் தொடங்கி இருந்தமை மற்றும் அதி வேகமாக வளர்ந்து வரும் விடுதலைப்புலிகளின் இராணுவ வல்லமை குறிப்பாக கடற்புலிகளின் அதிநவீன வளர்ச்சியும் அவர்களது வணிகப் போக்குவரத்து கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும். மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்களும்.சர்வதேச ரீதியில் அவர்கள் கொண்டிருந்த கடல் ஆதிக்கத்தை மேலும் நிரூபிப்பதாக அது அமைந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிய மேலாதிக்க அரசுகள் குறிப்பாக அமெரிக்கா அவசர அவசரமாக பல காட்சி மாற்றங்களைச் செய்யத் தொடங்கியது. இதன் வெளிப்பாடே நோர்வே மத்தியஸ்தம் என்ற பெயரிலான தலையீடும் அதனூடே விடுதலைப்புலிகளுக்கு விரிக்கப்பட்ட பொறிவலையும். இதன் பின்னர் நடந்த காட்சி மாற்றங்கள் யாவும் யாவரும் அறிந்ததே.

தற்சமயம் பல தமிழ் தேசியவாதிகள் தேசியத்தலைவர் சீனாவின் முன்மொழிவை ஏற்றிருக்க வேண்டும். ஏற்றிருந்தால் இன்று தலிபான்கள் ஆட்சி அமைத்தது போலவே விடுதலைப்புலிகளும் ஆட்சி அமைத்திருக்கலாம் என்று கூறுகின்றனர். அத்தோடு வீற்றோஃ VETO அதிகாரத்தை கொண்ட சீனாவை எதிர்த்து எந்த ஒரு வல்லரசும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கையெதுவும் செய்திருக்க முடியாது என்றும் கருதுகின்றனர். இன்று மேற்குலகிற்கு எதிரான நிலைப்பாட்டை இலங்கை அரசு எடுத்திருக்கின்ற போதும். போர்க்குற்ற ஆதாரங்கள் கைவசம் இருக்கின்றபோதும். மேற்குலகினால் எந்தவொருநடவடிக்கையையும் இலங்கைக்கு எதிராக செய்ய முடியாது உள்ளது என்றும் அதற்கு காரணம் சீனவல்லாதிக்க அரசின் ஆதரவு இலங்கையின் பக்கம் இருப்பதே என்றும் கூறுகின்றனர்.

அன்று மேதகு அவர்கள் சீன அரசின் அனுசரணையை ஏற்றிருந்தால் காட்சி மாற்றங்கள் எவ்வாறு அமைந்திருக்கும்? இது உங்கள் சிந்தனைக்கும் கற்பனைக்கும் விட்டுவிடுகிறேன்.

குறிப்பு. பின்னாளில் ராஜபக்சா ஆட்சிப்பீடம் ஏறியதும் சீனா இதே போன்றதொரு யோசனையை முன்வைத்தது. ராஜபக்சாவும் திருகோணமலைத்துறை முகம் நீண்டகாலமாக அமெரிக்க மற்றும் இந்திய இலக்காக இருப்பதால் அது பாரிய சிக்கலைத்தருமெனவும் வேறுஎந்த நிலப்பரப்பையும் நாம்தரத் தாயாராக இருப்பதாக கூறி பேரத்தை/deal ஐ முடித்துக்கொண்டார். சீனாவிற்குத்தேவையாக இருந்தது இலங்கையில் ஒரு தளம்.

சி.சிறீக்குமார்

# நாட்டில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இரட்டை குடியுரிமை பெற்றவர்களை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்

## அரசியல் ஆய்வாளர் செல்வரட்ணம் சுதாகர் அவர்களுடனான நேர்காணல்





கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : இன்றைய சீனாவினுடைய ஆக்கிரமிப்பு என்பதை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : நீண்ட காலமாகவே சீனாவின் சிந்தனைகள் இலங்கையில் எவ்வாறிருக்கின்றது என்பதைப் பற்றி நாங்கள் மிக அவதானமாக யோசிக்க வேண்டியதொரு விடயம். ஏனெனில் சீனா பட்டுப்பாதை திட்டத்தை பிரதானமாக நம்பியிருக்கக்கூடிய ஒரு நாடு. அந்த பட்டுப் பாதை திட்டத்தில் மிக முக்கியமான நாடாக சீனாவிற்கு இலங்கை தென்படுகின்றது. அதன் அடுத்த கட்டம் பட்டுப்பாதை திட்டத்துக்கு மிக முக்கயமான இடமாக அம்பாந் தோட்டை துறைமுகம் இருக்கின்றது.

ஆகவே அம்பாந்தோட்டை துறை முகத்திற்கு சீனா முதலீடு செய்யும் பொழுதே சீனாவிற்கு தெரியும் அம்பாந்தோட்டை துறைமுகம் தங்களது கையில் வந்து விழும் என்று சீனா முதலீட்டாளர்களுக்கும் சீன பொருளியலாளர்களுக்கும் அது நூறு வீதம் தெரியும். அதனால் தான் அம்பாந்தோட்ட துறைமுகத்தை அவர்கள் முதலீடு செய்துவிட்டு அதை கையடக்கிகொண்டார்கள். அதன் அடுத்தக்கட்ட விடயமாக இன்று கொழும்பு துறைமுக நகரம் இந்த கொழும்பு துறைமுக நகரத்தையும் சீனா ஏற்கனவே திட்டமிட்டு நன்றாக முதலீடு செய்திருக்கிறது. அதற்கு அப்பால் சீனாவின் பாதுகாப்பு. இன்றைய இந்தியாவின் முக்கியமான விடயங்களை வேவு பார்க்கும் விடயமாக வேவு பார்க்க வசதியான நாடாக சீனா இலங்கையை கருது கின்றது. விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இந்தியாவை வேவு பார்ப்பது என்பது மிக கடினமான விடயமாக இருந்தது ஆனால் தற் பொழுது அந்த நிலைமை சீனாவிற்கு இலகுபடுத்தியிருக்கிறது.

ஆகவே சீனா ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது பாதுகாப்பிற்கு இலங்கையை பயன்படுத்துகின்றது. குறிப்பாக இந்தியாவுடனான கொடுக்கல் வாங்கல் விடயங்களுக்கு இலங்கை ஒரு பிரதான நாடாக சீனாவிற்கு கிடைத்திருக்கிறது. ஆகவே சீனா அந்த சந்தர்ப்பத்தை சரியான வகையில் பயன்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல சீனா பொருளாதார நடவடிக்கைகளில் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்கின்ற ஒரு நாடு. அதாவது பொருளாதார நடவடிக்கைகளை பொருத்தவரையில் சீனா ஈவிரக்கம் பார்க்காது. இன்று பல சர்வதேச தொலைக்காட்சிகள் சர்வதேச ஊடகங்கள் எல்லாம் சீனாவில் இருக்கின்ற சில மனித உரிமை மீறல்களை கோடிட்டு காட்டுகின்றது. குறிப்பாக முஸ்லிம் மக்கள் அங்கு அடக்கப்படும் நிலைமைகள். தொழிற்சங்கங்கள் அடக்கம்படும் முறைமைகள். அவ்வாறு நீங்கள் கூறியதுபோல் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் முறைமைகளும் அங்கு இருக்கி ன்றன. ஆனால் எது எவ்வாறு சீனாவின் அநியாயங்கள் நடந்தாலும் மனித உரிமைகள் பற்றி இலங்கை ஒருநாளும் கவலைப்படுவது இல்லை. ஏனென்றால் சொந்த மக்கள் மத்தியி லே ஏற்பட்ட மனித உரிமைகளை கூட இந்த நாடு கவலைப்படுவது இல்லை. அப்படியாயின் எவ்வாறு சீனாவின் மனித உரிமைகளை பற்றி இந்த நாடு கவனிக்கும் என்பது நாங்கள் எதிர்பார்க்குமொரு விடயம்.

**கேள்வி : கொரோனா வைரஸின் ஆரம்பமே சீனாவில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட்டது அவ்வாறிருக்கும் பொழுது தொடர்ந்தும் இவர்கள் அவர்களுடன் நட்புறவை வைத்தி ருப்பதற்கு ஒன்று நீங்கள் கூறினீர்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் கொழும்பு காபட் சம்பந்தப்பட்ட விடயங்கள். தற்பொழுது அந்த ரீதியிலே இன்று பொருளாதார வீழ்ச்சியிலே இலங்கை பின்னடைந்திருப்பதும் அல்லது 632 அத்தியாவசியமற்ற பொருட்கள் என 100வீத உத்தரவாததொகையை விதித்திருப்பது என்பதும் நாடை அதாளபாதாளத்திற்குள் கொண்டு செல்லக்கூடிய அரசின் நடவடிக்கை யாக தானே பார்க்கப்படுகின்றது?**

பதில் : ஆம். எப்பொழுதுமே அரசியல் தலைவர்கள் அல்லது அதிகாரிகள் துறைசார்ந்தவர்கள் அந்தந்த நடவடி க்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் சாபக்கேடு என்ன வென்றால் குறித்த துறைசார்ந்த நிபுனர்கள் அந்தந்த துறைகளில் இல்லாமல் வேறு வேறு நபர்களை கையாளுகின்றனர். இன்றைய நிலையிலே சீனாவை கைவிட முடியாதவொரு நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் அந்தளவிற்கு அந்நியச்செலாவணி வற்றிவிட்டது என்பதற்கு அப்பால் இலங்கையை நம்பி வேறு நாட்டு முதலீட்டாளர்கள் பெரியளவில் அக்கறை காட்டுகின்றார்கள் இல்லை. ஆகவே இந்த பொருளாதார நிலையில் வெளிநாட்டு முதலீட்டா ளர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கட்டாயம் தேவை. வேறு நாடுகள் அக்கறை காட்டாத நிலையில் சீனாவில் இருந்து விடுபட முடியாத நிலைக்கு இலங்கை தள்ளப் பட்டிருக்கின்றது.

சீனாவின் பொறிக் குள் இந்த நாடு சிக்கியிருக்கின்றது என்பது தான் சரியான வார்த்தை யாக இருக்கும். அதுமட்டுமல்ல பல பொருட்களுக்கு இலங்கையில் இறக்குமதி தடை விதிக்கப்பட்டுள்ளது இதற்கு காரணம் என்னவென்றால் இறக்குமதிகளை நிதிப்படுத்தக்கூடிய அந்நியச்செலாவணி கையிருப்பு வற்றிவிட்டது இலங்கையில். அதனால் இந்த பொருட்களுக்கு தடை விதிக்கின்றார்கள். தடை விதிக்கும் சந்தர்ப்பம் இதுவல்ல. மக்கள் தாங்கள் உற்பத்தி செய்யமுடியாமல் நலிந்து போயி ருக்கின்றார்கள் வாழ வழியில்லை. உண்ண வழியில்லை வீட்டை விட்டு வெளியேற கூடாது அவ்வாறு கூறிவிட்டு எப்படி உற்பத்தியை எதிர்பார்ப்பது. உற்பத்தி செய்யவேண்டும் என்றால் மக்கள் சுதந்திரமாக திரிய வேண்டும் அந்த உற்பத்தி துறைகளுக்கு துறை சார்ந்த நிபுனர்களை நியமித்து அவர்களுக்கு உற்பத்தி துறைகள் தொடர்பாக ஊக்கப்பாடுகளை வழங்க வேண்டும். அதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இதையெல்லாம் அவர்கள் செய்கின்றார்கள் இல்லை. இதையெல்லாம் செய்யாமல் விட்டு இவ்வாறு தடைகளை விதிப்பது என்பது இந்த கொரோனா காலத்தில் பனை ஏறி விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் இந்த அரசாங்கம் நடந்து கொண்டிருக்கின்றது. உண்மையில் இன்று உலகம் எங்கோ சென்றுவிட்டது. உலகம் எங்கும் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. அவ்வாறு இருக்கும் பொழுது இலங்கை தற்பொழுது 70 ஆம் ஆண்டுக்கு வந்துவிட்டது. அதாவது 1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் இறக்குமதி பொருளாதாரம் இலங்கையில் காணப்பட்டது.

ஆனால் 1970 இலிருந்து 1978 வரையும் இறக்குமதி பதிலீட்டு பொருளாதாரம் இலங்கையில் இருந்தது. அவரசப்பட்டு அந்த இறக்குமதி பதிலீட்டு பொருளாதா ரத்தை நீக்கியது 1977 ஆம் ஆண்டு வந்த அரசாங்கம். அதாவது 1970 இல் இருந்து 1978 வரை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அரசாங்கம் ஒரு இறக்குமதி பதிலீட்டு கொள்கை பின்பற்றியது அந்த காலத் தில் அதுவொரு சிறந்த பதிலீட்டு கொள்கை. இறக்குமதி பதிலீட்டு கொள்கை என்பதன் பொருள் என்னவெனில் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு பதிலாக உள்நாட்டிலே பொருட்களை உற்பத்தி செய்வது. அதை இவ்வளவு காலமும் விட்டு விட்டு தற்பொழுது பொருளாதார கொள்கையை அமுல்படுத்துவது மிகவும் சிறுபிள்ளைத்தனமானது. ஏனெனில் நீங்கள் இங்கு ஒரு கொள்கை மேம்பாட்டாளர் என்ன செய்திருக்க வேண்டும். 1977 ஆம் ஆண்டு தாராள பொருளாதார கொள்கையை இலங்கையில் அறியப்படுத்துவது சரியான முற்கூட்டி யே செய்தவிடயம். 1977 இல் உண்மையில் தாராளா பொருளா தார கொள்கையில் இலங்கை போ ன்ற நாடுகளில் இருந்திருக்ககூடாது.

**நேர்காணல் : இரணியன்**

**தொடரும்...**

02ஆம் பக்க தொடர்ச்சி...

விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தவில்லை என வடகிழக்கிற்கு முன்னாள் தளபதியாக இருந்த கருணாம்மான் அவர்கள் ஒரு நேர்காணலில் சொன்னார். இவையெல்லாம் அரசினுடைய சதி. அரசு தான் இதனை திட்டமிட்டு செய்தது என குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளுக்கும் காத்தான்குடி பள்ளிவாசலை உடைந்ததற்கும் தொடர்பில்லை என கூறினார். ஏதேனும் ஆதாரம் இருந்தால் அதனை நிரூபியுங்கள் என்றுகூட சொல்லியிருந்தார்.

எனவே ஹிஸ்புல்லா அவர்கள் ஊற்காவற்றுறை படையினருக்கு நேரடியாக ஆயுதங்களை கூடஒப்படைத்தார். ஹஸ்புல்லாவின் ஆயுதங்களை வைத்து அவரும் இணைந்து தமிழினத்தை அழித்தொழித்தார். எனவே சாணக்கியன் ஒரு விடயத்தை சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு பேசுவதற்கு பலபேர் இருக்கின்றார்கள். ஆனால் உங்களை வைத்து அவர்கள் விளையாடுகின்றார்கள். நல்ல விடயம் ஆனால் தமிழ் மக்களுக்கு முஸ்லிம்களால் இழைக்கப்பட்ட அநீதிகளை நீங்கள் மறந்துவிடக்கூடாது. காத்தான்குடியிலே தாழங்குடாவிலே அருகில் இருப்பவர்களை கேளுங்கள் களவாஞ்சிக்குடியில் அருகில் இருக்கும் மக்களை கேளுங்கள் எப்படிப்பட்ட துரோகம் எங்களுக்கு இழைக்கப்பட்டது என்று. அனைத்து விடயங்கள் பற்றியும் பேசுகின்றார்கள். சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் பற்றி கதைத்தால் என்ன பிரச்சனை உள்ளது. யுத்தம் இலங்கையில் முடிவடைந்ததன் பின்னர் சஹ்ரானினுடைய குண்டுத் தாக்குதல் நாட்டில் இடம்பெற்றது இதில் அப்பாவி பொதுமக்கள் இறந்தார்கள். கோவில்களிலே இதனை நடத்துவது முட்டாள்தனம். தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருநாளும் ஆலயங்களில் வைத்து தாக்கியது இல்லை. ஆனால் இப்படிப்பட்ட ஈவிரக்கமற்ற இவர்கள் அதாவது சத்தியப்பிரமாணம் எடுக்கும் சஹ்ரானின் ஒளிப்பதிவு இருக்கின்றது வேண்டும் என்றால் சாணக்கியன் அவர்கள் அதனை போட்டுப்பார்க்கலாம். இதில் உங்களுடைய அரசியல் நடவடிக்கைகள் மடக்க வேண்டும் என்றதில்லை. நீதியான விடயத்தை நாங்கள் நேரடியாக கூறுகின்றோம். எங்களுக்கு அரசியலில் வரவேண்டிய தேவையுமில்லை பாராளுமன்றத்திற்குள் வரவேண்டிய தேவையுமில்லை. அன்றிலிருந்து இன்று வரை இந்த அரசியலுக்குள் நடப்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட எத்தனையோ அநீதிகள் இருக்கின்றன. தற்பொழுது இடம்பெறுகின்ற ஜெனீவா பேச்சில்கூட கிழக்கிலே இடம்பெற்ற பல படுகொலைகளின் பங்குதாரிகளாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஹிஸ்புல்லா உட்பட பலர் இருக்கின்றார்கள். எனவே நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும். தற்பொழுது ஒரு பரபரப்பாக சமூக ஊடகங்களில் உங்களுடைய பெயர் வரவேண்டும் என்பதற்காக ஆதரித்து பேசலாம் உங்களுக்கும் ஒருநாள் அவர்கள் அறுப்பார்கள். அப்பொழுது சிந்திக்கும் நிலை ஏற்படலாம். பலருக்கும் அவ்வாறு நடந்தது. சஹ்ரானின் ஒரு ஒளிப்பதிவு ஆதாரபூர்வமாக எங்க ளிடம் உள்ளது. அவர் கூறுகின்றார் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொ ள்ளாத எவராக இருந்தாலும் அல்ஹா சொல்வதைப்போல் கழுத்து வெட்டப் பட வேண்டும். அல்லது வரிப்பணம் கட்ட வேண்டும் என்ற விளக்கத்தை இவர் கொடுக்கின்றார். பல முஸ்லிம் இளம் சமுதாயத்திற்கும் இந்த இரு வெட்டு சென்றுவிட்டது. அதுபோல் சொர்க்கத்தில் 72 கன்னிகைகளுடன் இருக்கலாம் என கூறிய இறுவெட்டுக்களும் வெளியில் சென்றிருக்கின்றன.

எனவே அனைத்து முஸ்லிம்களையும் நாங்கள் தவறாக கூறவில்லை இதில் ஒன்று பாராளுமன்றத்திலே இவர்கள் இப்படி பேசும் பொழுது அவர்கள் மௌனமாக இருந்தது ஒரு தவறு. மற்றும் சாணக்கியன் அவர்கள் முஸ்லிம்களால் தமிழி னத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலே அவர் பேசவில்லை. அவருடன் நேரடியாக வே ஒரு நேர் காணலை தொடுத்திருந்தேன். இத் தனை விடயங்களையும் உங்களுக்கு ஆதாரபூர்வமாக தருகின்றேன் கல்முனையிலே எத்தனை இந்துக் கோவில்களை உடைத்தார்கள் என்று கேட்டேன். எல்லைக்காவலன் ஏகாம்பரம் என்று ஒருவர் இருக்கின்றார் அவர் 40 வீடுகளை பற்ற வைக்கும் பொழுது நேரடியாக பார்த்தவர். கோவில்களை உடைக்கும் பொழுது அதனை நேரடியாகவும் பார்த்துள்ளார். மக்களை கேட்டுபாருங்கள் எத்தனைமுறை அந்த பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்றிருக்கின்றார்கள் என்று. ஏராவூரிலே மயிலம்பாவடி அருகிலே இருப்பவர்களை கேளுங்கள் எத்தனைமுறை இடம் பெயர்ந்தார்கள் என்று. வாழைச்சேனை நீராவோடை பகுதியில் இருப்பவர்களையும் கேட்டுப்பாருங்கள் இந்த முஸ்லிம் கலவரத்தால் எத்தனை மக்கள் இடம்பெயர்ந்து சென்றார்கள் என்று. ஓட்டமாவடியில் எத்தனை பேர்களை பேரூந்துகளை மறித்து வெட்டினார்கள். இவற்றை சாணக்கியன் அவர்கள் சிந்திக்க வேண்டும். முஸ்லிம் தரப்பிற்கு நீங்கள் குரல் கொடுப்பது தவறு என்று கூறவில்லை பாராளுமன்ற உறுப்பினராக உங்களது பணியை செய்யுங்கள். ஆனால் நீங்கள் பேசுவதால் முஸ்லிம்கள் உங்களுக்கு வாக்களித்து இடம்பிடித்து தருவார்கள் என்ற உங்களது பகல்கனவு அதனை நீங்கள் ஒருபோதும் அடைந்து விட முடியாது. இன்று இருக்கின்றார்கள் நாளையும் அவர்கள் இன்சா அல்ஹா என்று கூறிவிட்டு அரசாங்கத்துடன் அனைவரும் கைகோர்க்கும் காலமும் நேரமும் சரியாக வரும். அப்பொழுது நீங்கள் தலையிலே கை வைப்பீர்கள். ஆனால் ரிஷாட் பதியூதின் அவர்கள், அசாத்சாலி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் சஹ்ரானுடன் தொடர்புடையவர்களா இல்லையா என புலனாய்வாளர்கள் கண்டுபிடித்து கூறட்டும். அதுபற்றி கவலையில்லை ஆனால் முஸ்லிம்களுடைய இந்த தீவிரவாதம் மிலேச்சத்தனமான தாக்குதலை நீங்கள் மெழுகி பூசுவதற்கு முயற்சிக்ககூடாது. உங்களுடைய குடும்பத்தில் ஒருவர் அந்த கொச்சிக்கடை தேவாலயத்திலும், மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலும் தாக்குதல் நடத்தியதைப் போல் நீர்கொழும்பில் நிகழ்த்தியிருந்தால் உங்களுடைய உறவினர்கள் இறந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு வார்த்தையை எங்குமே பேசமாட்டீர்கள். உங்களுடைய பேச்சுத்திறன் அல்லது மும்மொழியிலே நீங்கள் ஆற்றும் உரை அதைப்பார்த்து இன்று பலர் உங்களைப்பற்றி பேசுகின்றார்கள் என்றால் அத்தனைபேரும் நாளை உங்களை பலிகிடாயாக கழுத்தறுக்கப் போகின்றார்கள். இவர்களைப்போன்று கொக்கரிக்கின்ற பல முஸ்லிம் அரசியல்வாதிகள் இருக்கின்றார்களே. ஏன் சட்டத்தை கையாளுகின்ற நீதிபதி அலிசப்ரி அவர்களே அதில் இருக்கின்றார்கள்.

ஏன் அவரால் பேசமுடியாது. முஸ்லீம்களின் ஏஜன்டாக நீங்கள் தொழிற்படுகின்றீர்களா? என்ற கேள்வி கூட தற்பொழுது எழுப்பப்படுகின்றது. ஏனெனில் முஸ்லிம் அரசியல் தலைமைகளினால் தூண்டப்பட்டு தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டுகின்றோம். முடிந்தால் நீங்கள் இப்படியில்லை என்று ஆதாரபூர்வமாக நிரூபித்துக்காட்டலாம். ஆகவே உங்களுடைய குடும்பத்தில் முஸ்லிம்களால் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டால் நீங்கள் தற்பொழுது இந்த பாராளுமன்றத்தில் இவ்வாறு பேசுவீர்களா? என்பதனை சற்று சிந்திக்க வேண்டும். அரசியலில் பல மாற்றங்கள் வருவது வழக்கம் தான் ஆனால் ஹிஸ்புல்லா எத்தனைதரம் அரசாங்கத்தைவிட்டு மாறினார்.

ரிஷாட் பதியூதின் அவர்கள் தற்போதைய காலத்தில் தான் உறுதியாக பேசிவருகின்றார். கடந்த காலங்களில் அப்படியில்லை. மகிந்தவினுடைய செல்லப்பிள்ளை என்றழைக்கப்பட்டவர் தான் பசிலினுடைய செல்லப்பிள்ளை என்றழைக்கப்பட்டவர் தான் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் அவர்கள். வன்னியை அவர் எப்படி ஆட்டிப்படைத்திருந்தார் வன்னியை எப்படி வைத்திருந்தார் அங்கு எத்தனை காணிகள் சுருட்டப்பட்டது எத்தனை விளைவுகள் நடந்து என்பது பற்றி இன்னுமொரு வரலாறு இருக்கின்றது. இவர் அரசியலிலே பேசப்படும் பொருளாக இருந்தாலும்கூட ஜிகாத் என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. ஹிஸ்புல்லா அவர்கள் தான் கிழக்கு மாகாணத்திலே இந்த ஜிகாத் அமைப்பை வைத்திருந்தார். இதனையும் நீங்கள் தட்டிக்கொண்டிருக்க மறுக்க கூடாது. நிச்சயமாக எந்தவொரு இறைவனையும் நாங்கள் இழிவுபடுத்தக்கூடாது. அல்ஹாவை ஒரு கொலைகாரன் என்று கூற முடியாது. அவர்கள் புனிதமானவர்கள் குர்-ஆன் புனித வழிகளையே போதிக்கின்றது. ஆகவே சாணக்கியன் அவர்கள் அவரது அரசியல் பயணம் நீண்ட தூரத்திற்கு செல்ல வேண்டுமாக இருந்தால் சில விடயங்களை தவிர்த்துக்கொண்டு உங்களது அரசியலில் செல்வது நல்லது.














# விளையாட்டு செய்திகள்

## இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணம்

பாகிஸ்தானில் ஒரு தொடரில் விளையாட வாய்ப்பு கிடைக்கும் போது, இலங்கை கிரிக்கெட் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்ய தயாராக உள்ளது என்று இலங்கை கிரிக்கெட் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியூசிலாந்து சுற்றுப்பயணத்தை ரத்து செய்வதற்காக இலங்கையில் ஒரு குறுகிய தொடருக்காக இலங்கையை அணுகியதாகக் கூறப்படுகிறது.

“பாகிஸ்தான் எங்களுக்கு பாதுகாப்பை உறுதிசெய்தால், இரு அணிகளும் சுதந்திரமாக இருக்கும் காலக்கெடு இருக்கும்போது நாங்கள் ஒரு அணியை அனுப்ப தயாராக இருப்போம். 2019 ல் எங்கள் அணி சுற்றுப்பயணம் செய்தபோது பாகிஸ்தான் எங்களுக்கு அதிக பாதுகாப்பு அளித்தது” என்று இலங்கை கிரிக்கெட் அதிகாரி ஒருவர் கூறினார்.

“பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எஸ்எல்சி யின் சிறந்த நண்பர் என்பது உங்களுக்குத் தெரியும். நியூசிலாந்து தொடர் இரத்து செய்யப்பட்டதில் நான் தனிப்பட்ட முறையில் ஏமாற்றம் அடைகிறேன். 2019 ல் எங்கள் அணியை அனுப்பி அவர்களின் பாதுகாப்பின் வலிமையை அவதானிக்கும் முன் நான் பாகிஸ்தானுக்கு சென்றேன் என்று சொல்வதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

அவர்கள் வழங்கும் பாதுகாப்பை நம்பமுடியாததாக இருந்தது அனைத்து சமீபத்திய பாதுகாப்பு அமைப்புகளையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் நூற்றுக்கணக்கான கேமராக்கள் உள்ளன, ஒரு நபர் கவனிக்கப்படாமல் நகர முடியாது. எனவே, பாகிஸ்தான் பாதுகாப்பு குறித்து எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. எனவே, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எங்களை அழைத்தால், இதை நாங்கள் தீவிரமாக கருத்தில் கொள்வோம், ”என்று இலங்கை கிரிக்கெட் செயலாளர் மோகன் டி சில்வா உள்ளூர் செய்தித்தாளிடம் கூறினார்.

அண்மையில் பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணி, தொடர் ஆரம்பமாவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக பாதுகாப்பு சிக்கல்களை காரணம் சொல்லி தொடரை இரத்து செய்து அவர்கள் நியூஸிலாந்து திரும்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் பாகிஸ்தான் கிரிக்கட் சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஏனைய நாடுகளும் தயக்கம் காட்டி வரும் நிலையிலேயே, இல்கை கிரிக்கெட் செயலாளர் மொஹான் டி சில்வா இந்தக் கருத்தை கூறியிருக்கிறார்.




## கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி

இண்டியன் பிரீமியர் லீக் தொடரில் மும்பை இண்டியன்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 07 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இண்டியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணிசார்பில் அதிகபடியாக குயிண்டன் டி கொக் 55 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் லோக்கி பெர்கியூஸன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன்படி, 156 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 15.1 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெ ட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அணிசார்பில் அதிக படியாக ராகுல் திரிபாதி 74 ஓட்டங்களையும், வெங்க டேஷ் ஐயர் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மும்பை இண்டியன்ஸ் அணியின் ஜஸ்ப்ரிட் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

## இலங்கை உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் ஒக். 20இல் ஆரம்பம்

இலங்கை உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளை ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி தளர்த்தப்படவிருக்கும் நிலையில், இலங்கை கிரிக்கெட் சபை லீக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு மின்னஞ்சல் மூலமாக ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதியன்று உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக செப்டம்பர் மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள், கடந்த ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி கொவிட்-19 வைரஸ் தாக்கம் அதிகரித்ததனை அடுத்து போடப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டதனை அடுத்து ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி தொடக்கம் இலங்கை அரசாங்கம் வழங்கும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் என கூறப்படுகிறது.

இதேவேளை ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் ஆரம்பாக விருக்கும் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் மேஜர் லீக் டி20 தொடராக இருக்கும் என குறிப்பிடப்பட்டிருப்பதால், அதன் பின்னரே மூன்று நாட்கள் கொண்ட முதல்தரப் போட்டிகள் நடைபெறுவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மறுபுறம், இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றக் கூடிய வீரர்கள் அனைவரும் கொவிட்-19 வைரஸிற்கான தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, ஆரம்பமாகவிருக்கும் இலங்கையின் உள்ளூர் போட்டிகள் அனைத்தும், இலங்கையின் புதிய உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பினை பின்பற்றி நடக்கவிருப்பதனால், 2021-22ஆம் ஆண்டின் பருகாலத்திற்கான உள்ளூர் முதல்தர கிரிக்கெட் போட்டிகள் இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுக்கு முக்கியத்துவமிக்கதாக பார்க்கப்படுகிறது.



# உலக பார்வை



## Booster தடுப்பூசிக்கு அமெரிக்கா அனுமதி

சில பிரிவினருக்கு Booster தடுப்பூசியை வழங்க அமெரிக்கா அங்கீகாரம் வழங்கியுள்ளது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் COVID தொற்றுக் குள்ளாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளவர்களுக்கும் Pfizer booster தடுப்பூசியை செலுத்த அமெரிக்க ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இருப்பினும், அவர்கள் தமது இரண்டாவது தடுப்பூசியை 6 மாதங்களுக்கு முன்னர் ஏற்றியிருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. வழங்கப் பட்டுள்ள இந்த புதிய அங்கீகாரத்தின் கீழ், மில்லியன் கணக்கான அமெரி க்கர்கள் மூன்றாவது தடுப்பூசியை பெற தகுதி பெற்றுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.எவ்வாறாயினும், இந்த Booster தடுப்பூசிக்கு அமெரிக்க நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையத்தின் அனுமதி பெறப்பட வேண்டுமென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வடக்கு நைஜீரியாவில் காலரா நோய்த் தொற்றால் குறைந்தது 329பேர் உயிரிழப்பு!

வடக்கு நைஜீரியாவின் கானோ மாநிலத்தில் காலரா நோய்த் தொற்றால், குறைந்தது 329 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் மாநிலத்தின் 44 உள்ளாட்சி பகுதிகளில் 11,475 காலரா தொற்றுகள் பதிவாகியுள்ளதாக மாநிலத்தின் நோய் கண்காணிப்பு அதிகாரி சுலைமான் இலியாசு தெரிவித்தார். செவ்வாய்க்கிழமை நிலவரப்படி மாநிலத்தின் மூன்று உள்ளாட்சி பகுதிகளில் 31பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிட் டார். மேலும், 11,115பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர். 329பேர் உயிரி ழந்துள்ளனர். காலரா நோய்களின் எண்ணிக்கையில் நாட்டின் இரண்டாவது இடத்தில் கனோ இருப்பதாக அவர் கூறினார். இந்த நோயை பரிசோதிப்பதற் கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மாநில அரசாங்கம் காலரா சிகிச்சை மையங்களை நிறுவியுள்ளதுடன் சமூக அணிதிரட்டல் மற்றும் சமூக விழிப்பு ணர்வை தீவிரப்படுத்தியுள்ளது.

காலரா என்பது மிகவும் தீவிரமான நோயாகும். இது கடுமையான நீரிழப்பால் மரணத்திற்கு வழிவகுக்கும் கடுமையான நீர் வயிற்றுப்போக்கின் திடீர் தாக்குதலால் வகைப்படுத்தப்படுகிறது. நைஜீரியாவில் காலரா நோய் தொடர்ந்து நீடித்து வருகிறது. ஆண்டுதோறும் பெரும்பாலும் மழைக்காலங்களில் மற்றும் அடிக்கடி மோசமான சுகாதாரம், அதிக கூட்டம், சுத்தமான உணவு மற்றும் தண்ணீர் இல்லாத பகுதிகளில், மற்றும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் ஒரு பொதுவான இடங்களில் இருந்து பரவுகின்றது. ஆபிரிக்க நாடுகளில் அடிக்கடி நிகழும் வயிற்றுப் போக்கு நோயானது இந்தாண்டு மிகத்தீவிரமாக நைஜீரிய நாட்டை பாதித்திருக்கிறது. தற்போது வரை 23 மாநிலங்களில் 67,903 பேருக்கு காலரா நோய் தாக்கியிருப்பதாகவும் அதில் 2,423 பேர் உயிரிழந் திருப்பதாகவும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுகுறி த்து நாட்டின் நோய் தடுப்புத் துறை அதிகாரி சிக்வே ஹெக்வேசு கூறுகையில், 'வயிற்றுப் போக்கால் உயிரிழந்தவர்களில் 5 - 14 வயதுள்ள குழந்தைகளே அதிகம். இறப்பு வீதமானது ஆண்கள் 51 சதவீதமாகவும் பெண்கள் 49 சதவீத மாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது' என கூறினார். ஒழுங்கற்ற சுகாதாரம், மக்கள் நெருக்கம், கனமழையால் உருவான குட்டை நீர்கள், குப்பைகள் நிறைந்த பகுதிகள் மூலம் காலரா கட்டுக்கடங்காமல் பரவியிருக்கிறது என அரசாங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



## ஐ.நா சபையில் பேச அனுமதி கோரியுள்ள தலிபான்கள்

ஐ.நா. சபையில் உலக தலைவர்கள் பங்கேற்றுள்ள பொது விவாதத்தில் ஆப்கானிஸ்தான் சார்பில் பேச அனுமதியளிக்குமாறு தலிபான்கள் வலியுறுத் தியுள்ளனர்.

மேலும், ஐ.நா. சபைக்கான ஆப்கானிஸ்தானின் புதிய தூதராக முகமது சுஹைல் ஷாகீனை அவர்கள் நியமித்துள்ளனர்.

இது தொடர்பாக தலிபான் அரசின் வெளியுறவு அமைச்சர் அமீர்கான் முத்தாகி ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸிற்கு எழுதிய கடிதத்தில், ஆப்கானிஸ்தான் தூதர் நியமனம் பற்றியும் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பேச தமது தூதரை அனுமதிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், முந்தைய ஆப்கானிஸ்தான் அரசின் தூதர் குலாம் இசக்சாயின் பணி முடிந்துவிட்டதாக அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களிடம் இருந்து கடிதம் வந்திருப்பதை ஐ.நா. பொதுச்செயலாளரின் செய்தி தொடர்பாளர் பர்ஹான் ஹக் உறுதிப்படுத்தியுள்ளார்.



## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஸை சந்தித்தார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வம்சாவளி அமெரிக்க உப ஜனாதி பதி கமலா ஹரிஸை சந்தித்துள்ளார்.

வொஷிங்டனில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கமலா ஹரிஸ், அமெரிக்காவின் முதலாவது பெண் மற்றும் தெற்காசியாவைச் சேர்ந்த முதலாவது உப ஜனாதிபதியாவார்.

கமலா ஹரிஸின் வரலாற்று பதவி நிலை குறித்து, பிரதமர் நரேந்திர மோடி, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், தங்களை வரவேற்க இந்திய மக்கள் காத்திருப்பதாகவும் அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஸிடம், இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் விஜயமாக அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை இன்று அவர் சந்திக்க உள்ளார்.



## தியாக தீபம் திலீபன் சொன்ன– செய்தி என்ன?

"இந்த இனம்- இந்தத் தமிழினம் அடங்காது! அது போராடும்! ஆயுதம் இல்லாவிட்டாலும் அது போராடும். புல்லையும் எடுத்து அது போராடும். அடக்கு முறைக்கு அது வளைந்து கொடுக்காது!. பேரம் பேசாது-விட்டுக் கொடுக்காது. ஆயுதம் இல்லாவிட்டாலும்-உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலை வணங்காது! அது தொடர்ந்து போராடும். தன்னுடைய விடுதலைக்காக-நியாயத்திற்காக- நீதிக்காக-அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும்."

திலீபன் போராடினான்! சாவை சந்தித்தான். ஒரு புதிய விழிப்புணர்வை அவன் எமக்கு ஊட்டினான். அகிம்சைப் போராட்டத்தில் அவன் உண்ணா விரதமிருந்தான்! போராட்டத்திற்கு பசித்தது.-அவனே உணவானான். இலங்கை-இந்திய ஒப்பந்தம் முறையாகச் செயல்படுத்தப்படாது மட்டுமல்ல, எதிர் மறையான விடயங்கள் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டம். சிறிலங்கா அரசிடம் சாத்வீக முறையில் நீதி கேட்டு போராடமுடியாது என்பதை விடுதலைப்புலிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

தமிழீழ இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட வேண்டும், தமிழீழ பிரதேசத்தில் சிறிலங்கா அரசு பொலிஸ் நிலையங்களை அமைத்தல் நிறுத்தப்பட வேண்டும். புனர்வாழ்வு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். ஊர்காவல் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் பறிக்கப்படுவதுடன் தமிழ்க்கிராமங்கள் பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள இராணுவ முகாம்கள் மூடப்படவேண்டும்; என்ற கோரிக்கைகளை முன் வைத்து செப்டெம்பர் மாதம் 15ந் திகதி 1987ம் ஆண்டு திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தான். நவஇந்தியாவிடம் நீதி கேட்டு அவன் தன் அகிம்சை போராட்டத்தை தொடங்கினான்.

இந்த ஐந்து கோரிக்கைகள் புதிதானவை அல்ல. ஏற்கனவே இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையான விடயங்கள் தாம் அவை. இவற்றை நிறைவேற்றுவதற்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கிய தியாகி திலீபனின் மனஉறுதியை பற்றி கட்டாயம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

உறுதி என்றால் எப்படிப்பட்ட உறுதி! எடுத்த காரியத்திற்காக இறுதி மூச்சு உள்ள வரை உறுதியோடு போராடுகின்ற உளவலிமையுள்ள இலட்சிய உறுதி!

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்த போது ஒரு சொட்டு தண்ணீரையும் உட்கொள்ளாமல் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டும்; என்று திலீபன் முடிவெடுத்தான். அந்த முடிவில் அவன் உறுதியாக இருந்தான். அவனுடைய அந்த இறுக்கமான முடிவுக்கு தமிழீழ தேசிய தலைவர் சம்பந்தப்பட்ட நிகழ்வு ஒன்று காரணமாக அமைந்தது.

1986ம் ஆண்டு நவம்பர் மாதத்தின் போது தமிழ் நாட்டிலிருந்து தலைவர் பிரபாகரனின் தொலைத் தொடர்பு சாதனங்களை இந்தியா பறிமுதல் செய்தது. இதனால் தலைவர் கடும் சினம் கொண்டார். தொலைத் தொடர்புச் சாதனங்களை இந்திய அரசு திரும்பத் தரும் வரைக்கும் ஒரு சொட்டுத் தண்ணீர் அருந்தாமல் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை தலைவர் பிரபாகரன் உடனேயே ஆரம்பித்தார்.

அப்போது நடைபெற்ற விடயங்களை எமது நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

உடனடியாகத் தலைவர் ஆரம்பித்த சாகும் வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தை ஒரு நாள் கழித்தாலாவது ஆரம்பிக்கும்படி இயக்க பிரமுகர்களும் போராளிகளும் தலைவரை கெஞ்சினார்கள். அந்த ஒரு நாள் அவகாசத்தில் தமிழக மக்களுக்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், வெகுசன ஊடகங்களுக்கும் இந்த உண்ணாவிரதம் குறித்து அறிவித்த பின்னர் தலைவர் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கலாமே- என்று கூட அவர்கள் வாதிட்டார்கள். அந்த ஆலோசனையைத் திட்டமாக மறுத்துவிட்ட தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்குக் கூறிய பதில் இது தான்.

"இல்லை நீங்கள் சொல்வது ஓர் அரசியல் நாடகம். எனக்கு அது தேவையில்லை. நான் இந்த நிமிடம் இந்த வினாடியிலிருந்து ஒரு சொட்டுத்தண்ணீரும் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்து விட்டேன். இந்திய அரசு எமது தொலைத் தொடர்பு சாதனங்களை திருப்பித் தரும் வரைக்கும் அல்லது எனது உயிர் போகும் வரைக்கும் எனது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்".

ஆனால் 48 மணித்தியாலங்களுக்குள் இந்தியா அரசு பணிந்தது. தொலைத் தொடர்புச் சாதனங்கள், தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே கொண்டு வந்து தரப்பட்டன. தவைர் தனது உண்ணாவிரதத்தை முடித்தார்.

இந்த இலட்சிய உறுதிதான் தியாகி திலீபனிடமும் படிந்திருந்தது. தனது தலைவன் முன்னோடியாக நின்று வழிகாட்டிப் போராடியதை அவன் அடுத்த ஆண்டில் 1987ல் நடாத்தினான். "ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போகின்றேன் என்று திலீபன் அறிவித்தபோது தலைவர் பிரபாகரன் அவனிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். "தண்ணீரையாவது குடித்து உண்ணாவிரதத்தை தொடரலாம்" என்று தலைவர் பிரபாகரன் திலீபனை கேட்டுக் கொண்டார்.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.09.2021 அன்று வெளியிடப்பட்டது.